Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

## உணவு என்ற போர்வையில் ஆயுத சப்ளை

(மட்டக்களப்பு)

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து தமது முற்றுகைக்கு உள்ளாகியுள்ள முகாம் களுக்கும், தம்மிடம் வீழ்ச்சியடையும் நிலையிலுள்ள முகாம்களுக்கும் உணவு, மருந்து என்பன சப்ளை செய்ய விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டிருந்தனர். இதனைப் பயன்படுத்தி அம்முகாம்களுக்கு ஆயுத சப்ளை செய்யும் வேலையில் இலங்கை விமானப்படை ஈடுபட்டுள்ளது.

நேற்று மட்டக்களப்பு கும்புறுமுனை இராணுவமுகாமிற்கு உணவு என்ற போர்வையில் ஹெலிகப்டரில் இருந்து முகாமிற்குள் போடப்பட்ட பொதிகளில் சில விடுதலைப்புலிகள் நிலைகொண்டுள்ள முகாம் பகுதிக்குள்ளும் வீழ்ந்தன. இப்பொதிகளில் சாப்பாட்டிற்குப் பதிலாக துப்பாக்கி ரவ்வைகள் இருந்ததாக புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆனி 4 மீ ஆம் உ திங்கட்கிழமை (18 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 24 ஓசை 120

### கொழும்பு பஸ்கள் திரும்பின

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று கொழும்பு நோக்கி சென்ற பஸ்கள் வவுனியா தாண்டிக்குளத்தில் வைத்து திருப்பி யாழ்ப்பாணத்துக்கே அனுப்பப்பட்டன.

ஐநூறு ரூபா பயணக்கட்டணம் அறவிட்டு பயணிகள் இதில் ஏற்றிச்செல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வவுனியாப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதாலேயே இவை திருப்பி அனுப்பப்பட்டன.

# அரசின் கட்டுப்பாட்டில் விமானப்படை இல்லை!

## யுத்தநிறுத்தம் மீறல்

### மட்டக்களப்பு மாவட்டம்

## பெரியபோரதீவில் வீடுகள் தீக்கிரை; விமானப்படைக்கு அழைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரிய போரதீவு என்னும் இடத்தில் 150 தமிழர்களின் வீடுகள் ஆயுதப் படையினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே போன்று சாந்தர் மலை என்னும் இடத்திலும் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கணபதிபுரம் (மல்வத்த) கனகரெத்தினம் என்னும் சிற்றூரவைத் தலைவர் ஆயுதப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அத்தோடு சித்திரவேலு என்பவரின் இரு கைகளும் இராணுவத்தினரால் வெட்டப்பட்டுள்ளது.

மேலும் இக் கிராமத்தின் மூன்று பொலிஸார் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி, கல்லடி, கும்புறுமுனை, புனானை ஆகிய இடங்களில் தொடர்ந்தால் போல விமானத்தாக்குதலும், ஷெல் தாக்குதலும் இடம்பெற்ற வண்ணமே உள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவு மாவட்டம்

## மாங்குளத்தில் குண்டுவீச்சு!

## போர் நிறுத்த மீறலுக்கு பாதுகாப்பு செயலாளர் சிறில் ரணதுங்கா விளக்கம்

(யாழ்ப்பாணம்

ஆறுநாள் யுத்தத்தின்பின் நீதி அமைச்சர் ஹமீத் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்கு இடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்தம் ஒரே நாளுக்குள் ஸ்ரீலங்கா அரச படைகளினால் மீறப்பட்டுவிட்டது. இதுபற்றி இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிடம் விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டு ஆட்சேபனை தெ வித்தபோது விமானப்படை தமது கட்டுப் பாட்டுக்குள் இல்லை எனத் தெரிவித்தாராம்.

தமிழ் பிரதேசம் எங்கும் சிங்களஆயுதப்படைகள் யுத்த நிறுத்தத்தை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் நீதிஅமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்சா ஆகியோரிடம் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதாக புலிகள் வட்டாரங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா ஆகாயப்படை தமது கடடுத் பாட்டிற்குள் இல்லை எனத் தெரிவித்ததாகவும் புலிகள் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

விடுதலைப்புலிகள் கட்டுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் சீராக நடைபெறுகிறதாம்

நேற்று முன்தினம் அமைச்சர் ஹமீத்துக்கும் விடுதலைப் ... மாக நடைமுறைப்படுத்தப் படுகிறது என பாதுகாப்பு

### சூடுபட்டு மரணம்

நேற்று முன்தினம் காலை றெக்கிளமேசன் பாக் றோட்டில் இறந்தவர் அதிர்ச்சியால் அல்ல சூடுபட்டுத்தான் இறந்தார் என்று தெரிவிக்கப் படுகிறது.

வீட்டுக்கு வெளியில் இருந்தபோது நெஞ்சில்பாய்ந்தரவை வெளியேறவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தவறுதலாகத் துப்பாக்கி வெடித்துக்காயம்

(விசேட நிருபர்)

தவறுதலாக வெடித்த துப்பாக்கிச்சூட்டில் கீரிமலை நகுலேஸ்வர வீதியைச்சேர்ந்த

# பெரியபோரதீவில் வீடுகள் தீக்கிரை; விமானப்படைக்கு அழைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரிய போரதீவு என்னும் இடத்தில் 150 தமிழர்களின் வீடுகள் ஆயுதப் படையினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே போன்று சாந்தர் மலை என்னும் இடத்திலும் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கணபதிபுரம் (மல்வத்த) கனகரெத்தினம் என்னும் சிற்றூரவைத் தலைவர் ஆயுதப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அத்தோடு சித்திரவேலு என்பவரின் இரு கைகளும் இராணுவத்தினரால் வெட்டப்பட்டுள்ளது.

மேலும் இக் கிராமத்தின் மூன்று பொலிஸார் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி, கல்லடி, கும்புறுமுனை, புனானை ஆகிய இடங்களில் தொடர்ந்தால் போல விமானத்தாக்குதலும், ஷெல் தாக்குதலும் இடம்பெற்ற வண்ணமே உள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு மாவட்டம்

## மாங்குளத்தில் குண்டுவீச்சு!

மாங்குளத்தில் நேற்றும் தொடர்ந்து விமானத்தாக்குதல் நடைபெற்றது. அத்தோடு ஷெல் தாக்குதலும் இடம் பெற்றதினால் மாங்குளம் பதற்றமான நிலையாகவே இருந்தது.

யுத்த நிறுத்தம் ஏற்பட்ட வேளை மாங்குள முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடையும் தறுவாயில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமலை மாவட்டம்

## மூதூரில் கடைகள் எரிப்பு

திருமலை மாவட்டத்தில் மூதூரில் சிங்கள இராணுவம் யுத்த நிறுத்தத்தை மீறி ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளது. இரண்டு வீடுகளும், நான்கு கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

திருமலை மூன்றாம் கட்டை அலஸ் தோட்டத்தில் இராணுவம் சுட்டு இரண்டு பேர் மரணமடைந்தனர். ஆறாம் கட்டையில் விமானக் குண்டு வீச்சால் இரண்டு வீடுகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன.

வவுனியா மாவட்டம்

## விமானக்குண்டு வீச்சு; ஷெல் அடி

வவுனியாவில் பொதுமக்கள் செறிவாக வாழும் இடங்கள் மீது விமானங்கள் குண்டு வீசியும் முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதே வேளை வவுனியா காமினி வித்தியாலயத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் முகாமிற்கு முன்பாக இருநூறு யார் வெளியே வந்து காவல் அரண்களை அமைத்து வருகின்றார்கள்

யாழ். மாவட்டம்

## புலிகள் மீது பலாலிஇராணுவம் சூடு

நேற்றுக்காலை கட்டுவனில் தங்களால் விட்டுச் செல்லப்பட்ட புல்டோசரை எடுக்க விடுதலைப் புலிகள் சென்றபோது பலாலி முகாமில் இருந்து வெளியேவந்த இராணுவத்தினர் புலிகள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் புலிகள் புல்டோசரை எடுக்காது திரும்பினர். பின்னர் அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் புல்டோசரைச்சுற்றி நிலக்கண்ணிகளை வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

நயினாதீவு பகுதியில் கடற்படையினர் வடக்கு-கிழக்கு பகுதியில் போர் நிறுத்தம் அமுலாகி இருந்த போதிலும் தொடர்ந்து மக்களை இம்சித்து வருகின்றனர்.

தீவுப்பகுதியில் வேறு தீவுகளுக்கு செல்லும் படகுகளில் உள்ள பயணிகள் போகும் பொழுதும் வரும பொழுதும் தமது தடைமுகாமில் இறங்கி பரிசோதிக்கப்பட வேண்டும் என நிர்ப்பந்தித்துள்ளனர்.

மேலும் அவ்வப்போது நயினாதீவு ஊர்பகுதிக்குள் நுழைந்து பொதுமக்களுக்கு பெரும் தொல்லைகளை கொடுத்து வருவதாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் கிராம மக்களை அடையாள அட்டை கேட்டும் கொண்டு வராதவர்களை துப்பாக்கிகளால் தாக்கியும் வருகின்றனர். (ம)

## யாழ்-கொழும்பு பஸ்சேவை கட்டணம் ரூபா 500 வரை

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு பஸ்சேவை நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒரு சில குறிப்பிடத்தக்க தனியார் பஸ்கள் மட்டுமே இச்சேவையில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த பஸ் சொந்தக்காரர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்காக

(6 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

ஆறுநாள் யுத்தத்தின்பின் நீதி அமைச்சர் ஹமீத் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்கு இடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்தம் ஒரே நாளுக்குள் ஸ்ரீலங்கா அரச படைகளினால் மீறப்பட்டுவிட்டது. இதுபற்றி இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிடம் விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டு ஆட்சேபனை தெ வித்தபோது விமானப்படை தமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை எனத் தரிவித்தாராம்.

தமிழ் பிரதேசம் எங்கும் சிங்கள ஆயுதப்படைகள் யுத்த நிறுத்தத்தை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் நீதிஅமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்சா ஆகியோரிடம் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதாக புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ச்சியாகக் கிழக்கில் குண்டு வீசுவது தொடர்பாக ஆட்சேபம் தெரிவித்தபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா ஆகாயப்படை தமது கட்டுத்பாட்டிற்குள் இல்லை எனத் தெரிவித்ததாகவும் புலிகள் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

விடுதலைப்புலிகள் கட்டுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் சீராக நடைபெறுகிறதாம்

நேற்று முன்தினம் அமைச்சர் ஹமீத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தம் திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப் படுகிறது என பாதுகாப்பு அமைச்சு நேற்றுப் பகல் வித்துள்ள அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒரு சில சிறு அத்துமீறல் சம்பவங்களே இடம் பெற்றுள்ளதாகவும், இதற்கு தூர இடங்களுக்கான போதிய தொடர்புகள் இல்லாமைகாரணமாக இவை ஏற்பட்டிருக்கலாம் எனவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ‘ஷெல்’ அடித்த சமயம் கொள்ளையடித்தனர்

(கிளிநொச்சி)

கடந்த நான்கு நாட்களாக கிளிநொச்சி நகரிலுள்ள கடைகள், வீடுகள் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரில் தாக்குதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்க சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திய திருடர்கள், பூட்டப்பட்டிருந்த கடைகளை பின் பக்கத்தால் உடைத்து பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்களையும், ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை திடீரென கிளிநொச்சி இராணுவ முகாம் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட குண்டு வெடிப்புகளுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்களுக்கும்,

(6ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி ஆஸ்பத்திரி வளவில்

## தலை, கால் இல்லாமல் மனித முண்டம் கிடக்கிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி காணிக்குள் இனம் தெரியாத ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகிறது. இச்சடலத்திற்கு அண்மையில் நீல நிற வான் ஒன்று அநாதரவாக விடப்பட்டுள்ளது.

உருக்குலைந்த நிலையில் கிடக்கும் சடலம் முண்டமாகவே காணப்படுகிறது. தலைப்பகுதியோ, காலோ காணப்படாத நிலையில் கிடக்கும் இம் முண்டத்தில் உடல் உறுதியானதாகக் காணப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் விடுதலைப்புலிகளால் கிளிநொச்சி இராணுவ முகாம் தாக்கப்பட்டபோது இந்நபர் சுடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவரது சடலத்திற்கு அண்மையில் யாரும் செல்லமுடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசத்தொடங்கியுள்ளது. (49)

கிளிநொச்சி மாவட்ட யுத்தநிறுத்த மீறல்

## கிளிநொச்சிக் கச்சேரி சேதம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த வியாழக் கிழமை அதிகாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து கிளிநொச்சி நகரிலுள்ள கச்சேரி மற்றும் அரச கூட்டுத் தாபனங்களின் கட்டிடங்கள் பல பாரிய சேதத்திற்குள்ளாயின.

கிளிநொச்சிகச்சேரியிலுள்ள சகலகட்டிடங்களும் பொம்பர் தாக்குதல்களினால் பாரிய சேதத்திற்குள்ளாயின. ஏ.பி.சி கட்டிடம், பட்டினசபைக் கட்டிடம், பொலிஸ் நிலையக் கட்டிடம், வர்த்தகஸ்தாபனங்கள், ரயில் நிலைய கட்டிடம், சந்தைக் கட்டிடம் ஆகியனவும் சேதமடைந்தன.

கிளிநொச்சிகச்சேரியின்முன் பக்கம் அப்படியே இருக்க பின்புறம் முழுக்க சேதமாகிஉள்ளதால் பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சூடுபட்டு மரணம்

நேற்று முன்தினம் காலை றெக்கிளமேசன் பாக் றோட்டில் இறந்தவர் அதிர்ச்சியால் அல்ல சூடுபட்டுத்தான் இறந்தார் என்று தெரிவிக்கப் படுகிறது.

வீட்டுக்கு வெளியில் இருந்தபோது நெஞ்சில்பாய்ந்த ரவை வெளியேறவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலாகத் துப்பாக்கி வெடித்துக் காயம்

(விசேட நிருபர்)

தவறுதலாக வெடித்த துப்பாக்கிச்சூட்டில் கீரிமலை நகுலேஸ்வர வீதியைச்சேர்ந்த மகாலிங்கம் சிவஞான சுந்தரம் (வயது 33) காலில் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை (17-6-90) நடைபெற்றது.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர்அவசர சிகிச்சையின்பின்பாக யாழ். அரசினர் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (21)

## ஹெலி ரோந்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படை ஹெலி ஒன்று நேற்று இரவு 8மணியிலிருந்து 9மணிவரை பல தடவைகள் யாழ்நகரில் ரோந்து சுற்றிப் பறந்தது. வானில் உயரப்பறந்த இந்த ஹெலியின் சத்தத்தைக் கேட்கக் கூடியதாக இருந்ததே தவிர ஹெலியைப் பார்க்க முடியவில்லை. ஹெலி யாழ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரேத ஊர்வலம் மீதும் ஹெலி சூடு

இறந்த போராளி நல்லூர் சதாசிவம் தயாளனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் (நேற்று பிற்பகல் நாலுமணி) ஹெலியில்இருந்து ஐந்து நிமிடங்கள்வரை சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்ததால் நாலா பக்கமும் சிதறி ஓடினர்.

துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்த போதும் அவரது சடலம் தாங்கி வந்தோர் கீழே இறக்காது நேரே சுடலை வரை கொண்டு சென்று தகனம் செய்தனர்.

இவரது ஈமக்கிரியைகளுக்கு முன முன்னாள் பிரசைகள் குழு தலைவர் திரு பொ. தங்கராசா இறந்த போராளியைப் பற்றி இரங்கலுரை நிகழ்த்தினார்.

## ஆங்கில தரப்படுத்தல் பரீட்சை பின் போடப்பட்டுள்ளது

(அரால்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடாத்தப்படவிருந்த விஞ்ஞான தொழிநுட்ப ஆங்கில தரப்படுத்தல் பரீட்சை வினாத்தாள் வந்து சேராததால் பின்போடப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு மாவட்ட சிற்றூரவைகள்

# நிர்வாக உறுப்பினர்களின் பட்டியல்

**முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் கிராம ரீதியாக அமைக்கப்பட்ட சிற்றூரவைகளினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளது பெயர்ப்பட்டியல்**

**குமுழமுனை 6 ஆம் வட்டாரம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சி. செல்வரட்ணம் |
| 2. | செயலாளர் | க. தெய்வேந்திரராசா |
| 3. | பொருளாளர் | க. இராசேந்திரம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | க. சுப்பிரமணியம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | இ. சிவரஞ்சினிதேவி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | த. ஸ்கந்தராசா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சி. மாலினி |

**குமுழமுனை 7 ஆம் வட்டாரம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. யோகேந்திரன் |
| 2. | செயலாளர் | பொ. உதயரசா |
| 3. | பொருளாளர் | க. இரத்தினசிங்கம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | சி. சிவராசா |
| 5. | நிர்வாக உறுப்பினர் | ம. விஸ்வநாதன் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | தா. சாந்தகுமாரி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | இ. அரியரட்ணம் |

**ஆறுமுகத்தான்குளம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | கி. பாலசிங்கம் |
| 2. | செயலாளர் | இ. கந்தசாமி |
| 3. | பொருளாளர் | க. இராயப்பு |
| 4. | நிர்வாக உறுப்பினர் | வே. வேலுச்சாமி |
| 5. | நிர்வாக உறுப்பினர் | கா. புனிதவதி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. காளிமுத்து |
| 7. | நிர்வாக உறுப்பினர் | க. தவராசா |

**சிலாவத்தை நகர் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சி. யோகேஸ்வரன் |
| 2. | செயலாளர் | சி. சண்முகநாதன் |
| 3. | பொருளாளர் | செ. தங்கராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | ந. கோணேஸ்வரன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | அந்தோனிப்பிள்ளை |
| 6. | நிர்வாக உறுப்பினர் | மதுரநாயகம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி. ச. கணேஸ்வரி |

**சிலாவத்தை தெற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ஜி. எஸ். பிறிற்றோ |
| 2. | செயலாளர் | செல்லத்துரை |
| 3. | பொருளாளர் | கிருஸ்ணன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | வடிவேலு |
| 5. | நிர்வாக உறுப்பினர் | பாக்கியம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | செபமாலை |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சின்னத்துரை |

**உண்ணாப்பிலவு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ச. தர்மகுலம் |
| 2. | செயலாளர் | ச. தவராசா |
| 3. | பொருளாளர் | க. பாலசுப்பிரமணியம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | இ. மகேந்திரன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | பொ. கனகசபை |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சி. இராசரத்தினம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி க. சிவபாக்கியம் |

**கரைச்சிக்குடியிருப்பு கி. சே. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. பகவதிராஜ் |
| 2. | செயலாளர் | வ. முனீஸ்வரன் |

| | | |
|---|---|---|
| 5. | நிர்வாக உறுப்பினர் | எ. சிங்கராசா |
| 6. | நிர்வாக உறுப்பினர் | ஜெ. அல்போன்ஸ்கிசேவு |
| 7. | நிர்வாக உறுப்பினர் | என். உலகநாதன் |

**வண்ணாங்குளம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. யேசுதாஸ் |
| 2. | செயலாளர் | பாலுமத்தியூஸ் |
| 3. | பொருளாளர் | பா. மேரிராணி |
| 4. | நிர்வாக உறுப்பினர் | க. தவரத்தினம் |
| 5 | நிர்வாக உறுப்பினர் | சி. சிறிராசசிங்கம் |
| 6, | நிர்வாக உறுப்பினர் | ச. சந்திரபாலா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சி. கயிந்தாம்பிள்ளை |

**முல்லைத்தீவு பட்டினம் முஸ்லிம் கி சே உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சே. பிர்தவுஸ் |
| 2. | செயலாளர் | கே. ஜமால்தீன் |
| 3. | பொருளாளர் | மு. யூ. பைறூஸ் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | த. ஜன்ஸீர் |
| 5. | ,, | மு. மஜ்லிஸ் |
| 6. | ,, | அ. ஜெசீலா |
| 7. | ,, | செ. கா. அப்துல் காதர் |

**முல்லைத்தீவு பட்டினம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | செ. பாக்கியநாதன் |
| 2. | செயலாளர் | அ. சிவனேஸ்வரன் |
| 3. | பொருளாளர் | ரி. குணரெட்ணம் |
| 4. | நிர்வாகம் | ந. ஜெயக்குமார் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | மு. கனகலிங்கம் |
| 6. | ,, ,, | சு. இராசையா |
| 7. | ,, ,, | ரஞ்சிதமணி |

**செல்வபுரம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | பொ. சேதுபதி |
| 2. | செயலாளர் | டொமினிக் அலோசியஸ் |
| 3. | பொருளாளர் | மரியநாயகம் தொம்மைப்பிள்ளை |
| 4. | நிர்வாக உறுப்பினர் | ஆ. சி. அமல்ராஜ் |
| 5. | ,, | திருமதி ஆசீர்வாதம் |
| 6. | ,, | டானியல் கில்பேட் |
| 7. | ,, | க. கமலேஸ்வரன் |

**கள்ளப்பாடு - வடக்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ஜோ. ஜோகநாதன் |
| 2. | செயலாளர் | அ. கணேசலிங்கம் |
| 3. | பொருளாளர் | மு. நடராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | இ. அம்மன்கிளி |
| 5. | ,, | அருமைதுரை |
| 6. | ,, | நா. தவேந்திரம் |
| 7. | ,, | ச. அருள்ஞானசீலன் |

**கள்ளப்பாடு தெற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | பொ. தங்கவேல் |
| 2. | செயலாளர் | து. ரன்கரன் |
| 3. | பொருளாளர் | எஸ். சத்தியகீர்த்தி |
| 4. | நிர்வாக உறுப்பினர் | எஸ். யோகநாதன் |
| 5. | ,, | நா. சிவலோகநாதன் |
| 6. | ,, | ம. ஜெனற் ஜெயராணி |
| 7. | ,, | எஸ். சிவலிங்கம் |

**உப்புமாவெளி கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சிவனடியார் |
| 2. | செயலாளர் | ப. பிரசாத் |
| 3. | பொருளாளர் | மு. கேபட் |

## மன்னாரிலிருந்து சென்றனர்

(சென்னை)

மன்னாரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து இப்பகுதியைச் சேர்ந்த 34 பேர் படகுகளின் மூலம் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்துள்ளனர். ஸ்ரீ லங்கா இராணுவம் தமிழர் பிரதேசத்தில் மேற்கொண்ட அட்டூளியங்கள் குறித்து இவர்கள் அங்கு எடுத்துரைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மாகாண சபையிடம் கையளிப்பு

(கொழும்பு)

மலையக தோட்டப்பகுதிகளிலுள்ள அரசினர் வைத்திய சாலைகள் அனைத்தும் மாகாணசபையின் கீழ்கொண்டுவரப்படவுள்ளது.

இங்கு இடம்பெற்றுவரும் இறப்பு அதிகரிப்பை தடுத்து நிறுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படஉள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரிவிளம்பரம்

**புறொயிலர் குஞ்சுகள்**

CHRISTOMBU FARM THREE ACRE FARM, BAIRAHA FARM புறோயிலர் குஞ்சுகளை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Balrahn Farm புறோயிலர் குஞ்சுகள் மட்டும் July 15வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். July 15க்கு பின் தேவையான அளவு Bairaha Farm புறோயிலர் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (R.343)

**தேவை**

மூன்று பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு மாநகர சபை எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது முழு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 32, பிரப்பன்குளம் றோட் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (R-362

**காணவில்லை**

காங்கேசன்துறை பஸ் நிலையத்தில் ஆறுமுகம் பூமணி ஆகியஎனது மணிபர்ஸ் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆறுமுகம் பூமணி, சங்கானை மேற்கு சித்தங்சேணி என்ற விலாசத்திற்கு அனுப்பவும். (R/366)

## தேவை


யாழ். நகரிலுள்ள பிரபல நுண்கலை நிறுவனமொன்றிற்கு தரம் 1 இலிருந்து ஆசிரியர் தரம் வரை பரதநாட்டியம், வாய்ப்பாட்டு பயிற்றுவிப்பதற்குரிய தகைமையுள்ள ஆசிரியைகள் தேவை.

25-06-90 க்கு முன் விண்ணப்பிக்குக

Co. ஈழநாதம்,
31, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1180)


## 90 ஆம் நாள் நினைவுஅஞ்சலி



மலர்வு 1963 - 04 - 01 உதிர்வு 1990 - 03 - 21


**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**

கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது
**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு. விடுமுனை நாட்களில்
10-30, 2-30, 6-45, 9-4
ரஜனி, அம்பிகா, ஜெயசங்கர் சுஜாதா, நாகேஸ் நடித்த
**மாவீரன்**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக் நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு கமல், கௌதமி நடித்த
**அபூர்வ சகோதரர்கள்**

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)


## எரிபொருள் விலையேற்றம்

7. நிர்வாக உறுப்பினர் திருமதி. ச. கணேஸ்வரி

**சிலாவத்தை தெற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ஜி. எஸ். பிறிற்றோ |
| 2. | செயலாளர் | செல்லத்துரை |
| 3. | பொருளாளர் | கிருஸ்ணன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | வடிவேலு |
| 5. | நிர்வாக உறுப்பினர் | பாக்கியம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | செபமாலை |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சின்னத்துரை |

**உண்ணாப்பிலவு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ச. தர்மகுலம் |
| 2. | செயலாளர் | ச. தவராசா |
| 3. | பொருளாளர் | க. பாலசுப்பிரமணியம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | இ. மகேந்திரன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | பொ. கனகசபை |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சி. இராசரத்தினம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி க. சிவபாக்கியம் |

**கரைச்சிக்குடியிருப்பு கி. சே. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. பகவதிராஜ் |
| 2. | செயலாளர் | வ. முனிஸ்வரன் |
| 3. | பொருளாளர் | திருமதி த. இராசசிங்கம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | ச. கதிரவேலு |
| 5. | நிர்வாக உறுப்பினர் | க. கணபதிப்பிள்ளை |
| 6. | நிர்வாக உறுப்பினர் | கா. பரஞ்சோதி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி நா. சுப்பிரமணியம் |

**கோயில்குடியிருப்பு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சி. மரியரெத்தினம் |
| 2. | செயலாளர் | அ. அல்பேட் |
| 3. | பொருளாளர் | சூ. லாசறஸ் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | க. ஜெஜி அன்ரன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | யோசப் பாக்கியராஜ் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சா. மாசிலாமணி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | பிரான்சீஸ் |

**மணல்குடியிருப்பு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | புவிராசசிங்கம் |
| 2. | செயலாளர் | அற்புதராசா |
| 3. | பொருளாளர் | ரி. றோயல் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | அரி |

| | | |
|---|---|---|
| 6. | ,, | டானியல் கில்பேட் |
| 7. | ,, | க. கமலேஸ்வரன் |

**கள்ளப்பாடு - வடக்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ஜோ. ஜோகநாதன் |
| 2. | செயலாளர் | அ. கணேசலிங்கம் |
| 3. | பொருளாளர் | மு. நடராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | இ. அம்மன்கிளி |
| 5. | ,, | அருமைதுரை |
| 6. | ,, | நா. தவேந்திரம் |
| 7. | ,, | ச. அருள்ஞானசீலன் |

**கள்ளப்பாடு தெற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | பொ. தங்கவேல் |
| 2. | செயலாளர் | து. ரன்கரன் |
| 3. | பொருளாளர் | எஸ். சத்தியகீர்த்தி |
| 4. | நிர்வாக உறுப்பினர் | எஸ். யோகநாதன் |
| 5. | ,, | நா. சிவலோகநாதன் |
| 6. | ,, | ம. ஜெனற் ஜெயராணி |
| 7. | ,, | எஸ். சிவலிங்கம் |

**உப்புமாவெளி கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சிவனடியார் |
| 2. | செயலாளர் | ப. பிரசாத் |
| 3. | பொருளாளர் | மு. கேபட் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | எம். வீ. முருகேசு |
| 5. | ,, | சு. சிதம்பரப்பிள்ளை |
| 6. | ,, | சி. சந்திரன் |
| 7. | ,, | தி. செல்லமுத்து |

**அளம்பில் - வடக்கு கி. சே. உ. பிரிவு**


| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | எம். ஏ. ஜெயரட்ணம் |
| 2. | செயலாளர் | எம். ஜோர்ஜ் |
| 3. | பொருளாளர் | எம். பாலகிருஸ்ணன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | எஸ். பிரான்சிஸ் |
| 5. | ,, | பி. ஜெயானந்தம் |
| 6. | ,, | தம்பிஐயா |
| 7. | ,, | செ. இருதயநாதர் |

**அளம்பில் கிழக்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ஏ. யேசுரட்ணம் |
| 2. | செயலாளர் | ஜெபனேசன் |
| 3. | பொருளாளர் | மனுவேற்பிள்ளை |
| 4. | நிர்வாக உறுப்பினர் | நீ. பாக்கியநாதன் |
| 5. | ,, | ஈ. பஸ்தியாம்பிள்ளை |
| 6. | ,, | செ. பி. ஆரோக்கியநாதன் |
| 7. | ,, | எம். ஜீவராசா |

(தொடரும்)

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி



மலர்வு
1963 - 04 - 01

உதிர்வு
1990 - 03 - 21

### வ. ஸ்ரீகுமார்

அன்புத் தெய்வமே! என்னுயிருக்கு
உயிரான தெய்வமே!
தொண்ணூறு நாட்கள் சென்றதுமே
எம் இல்லமெல்லாம் இருண்டதுவே!
உங்கள் மேல் பாசமாய் இருந்த
எம்மை எல்லாம் பரிதவிக்க விட்டு
நீங்கள் பரமனடி சென்றீரோ?
பாரினிலே பாவி மனைவியை
விதவையாக்கி மக்கள் செல்வங்களையும்
பரிதவிக்க விட்டீரே!
தொண்ணூறு நாட்கள் அல்ல
என்னுயிர் உள்ளவரை உங்கள் நினைவு
எம்மை விட்டழியாது!
நீங்கள் தெய்வமாக இருந்து
எம்மை ஆசீர்வதியுங்கள்!

இங்ஙனம்
நித்தம் உங்கள் நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்

(R/365)


மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
**அபூர்வ சகோதரர்கள்**

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
விடுமுறை நாட்களில்
10·30, 2:30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)


## எரிபொருள் விலையேற்றம்

(ஓட்டுசுட்டான்)

முத்தையன்கட்டு எரிபொருள் நிலையத்தில் ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் விலை 7-50 ஆகும்.

இந்த நிலையத்தில் மண்ணெண்ணை விற்பனை மொத்த வியாபாரிகளுக்கு பரல்களில் மட்டும்தான் நிரப்பப்படுகிறது. பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுவதில்லை.

செற் விலையாக 6-98சதம் ஆகும். ஆனால் முத்தையன் கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விற்கப்படும் சில்லறை விலை 7-50 சதம் ஆகும்.

இதனையே எரிபொருள் நிலையத்திலும் நடைமுறைப்படுத்தி வருகிறது. (58)


**வாடிக்கையாளர்களே....!**

உங்கள் வாகனங்கள் அனைத்தையும் மிக நுட்பமான முறையில் குறித்த நேரத்தில் 'சேவிஸ்' செய்து தருவதில் யாழ்நகரில் தன்னிகரற்றவர்கள்.....

**ரோறா லிமிட்டெட்**

உங்களுக்குத் தேவையான சகலவிதமான **மசகு எண்ணெய் வகைகள்**

அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள....

**ரோறா லிமிட்டெட்** **TORA LTD.**

5, Clock Tower Road, JAFFNA.

(B/1183)

## குற்றச்சாட்டுக்கு அமைச்சர் மறுப்பு

(புதுடில்லி)

அகில இந்திய தொலைக் காட்சி சேவையில் எதிர்கட்சி களுக்கு போதுமான முக்கியத் துவம் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டினை இந் திய மத்திய செய்தி ஒலிபரப்பு துறை அமைச்சர் திரு. பி. உபேந்திரா நிராகரித்துள் ளார்.

ஏப்ரல்,மே மாதங்களில் பாராளுமன்ற கூட்டத் தொடர் சம்பந்தமாக தொலைக் காட்சியில் ஆளும் கட்சி 27 நிமிடங்களையே பாவித்துள்ளபோதும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 26 1/2நிமி டங்கள் கொடுக்கப்பட்டதாக வும் தெரிவித்த அமைச்சர் உபேந்திரா இந்திரா காங்கி ரஸ் கட்சியின் படங்களுக்கு 4.36 நிமிடங்கள் ஒதுக்கப்பட் டிருந்த அதே வேளையில் ஆளும் கட்சியின் படங்களுக்கு 3.04 நிமிடங்களே கொடுக்கப் பட்டதென்றும் தெரிவித்துள் ளார்.

# வடகொரியா தனது கடும் போக்கை கைவிட வலியுறுத்து!

## சோவியத் வலியுறுத்து

(மாஸ்கோ)

''வடகொரியா தொடர்ந்து கையாண்டுவரும் தனது கடும் போக்கான நடவடிக்கைகளை முற்றாக கைவிடவேண்டும்''. என்று சோவியத் யூனியன் வலியுறுத்தியுள்ளதுடன்; விய ட்னாமில் நிலைகொண்டுள்ள சோவியத்படையின் எண்ணிக் கையை கட்டம், கட்டமாக குறைப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டு வரு வதாகவும் தெரிவிக்கப்பட் டது.

இதேவேளை தற்பொழுது தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் சூரிச் தீவுகளை மீண்டும் யப்பானிடம் ஒப் படைப்பதற்கான செயல் திட் டங்களையும் சோவியத் யூனி யன் ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்ற உச்சி மகாநாட் டின் போது சோவியத் ஜனா திபதி திரு. மிகெல் கொர்ப சேவ் இத் தீவுகளை மீண்டும் யப்பானிடம் ஒப்படைக்க கருத்து ரீதியாக ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக் கது. யப்பானுக்கு சொந்த மான இத் தீவுகள் இரண்டா வது உலக மகா யுத்தத்தின் முடிவிலேயே சோவியத் யூனி யனின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சோவியத் யூனியன் மேற் கொள்ள உள்ள இந்த நட வடிக்கையின்மூலம் யப்பான், தென்கொரியா ஆகியநாடுகளி லிருந்து பெருந்தொகையான முதலீடுகளை பெற்றுக்கொள் ளும் வாய்ப்பு தமக்கு ஏற்ப டும் என்று ஜனாதிபதி கொர் பசேவ் நம்பிக்கை தெரிவித் துள்ளார்.

## ஸ்ரீநகரில் தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்கள்

ஸ்ரீநகர் குல்வாமா, அனந் ஆகிய பிரதேசங்களில் படை யினர் மீது பல தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதாகவும் தொடர்ச்சியாக பாரிய குண்டு வெடிப்பு சத்தங்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப் பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த சம்பவங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து சரியான தகவல்கள் கிடைக் காததுடன் இப்பகுதியில் அமு லில் இருந்தஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை பஞ்சாப்பில் சக்காத்தா என்ற தீவிரவாத தலைவர்களில் ஒருவர் அரச படைகளால் சுட்டுக்கொல்லப் பட்டதாகவும் அறிவிக்கப்பட் டது.

# செக். நாட்டிலிருந்து சோவியத் படைகள் வெளியேற்றம்

(மாஸ்கோ)

செக்கோஸ்லாவாக்கியாவிலி ருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேற ஆரம்பித்துள்ளன.

இங்கு தாம் நிர்மாணித்த கட்டடங்கள், வீதிகள் என்ப வற்றுக்கான செலவுகளையும் சோவியத் அதிகாரிகள் கேட் டுள்ளனர்.

கடந்த இருபது வருட கால மாகத் தமது நாட்டின் சுற் றாடலுக்கு அவர்கள்ஏற்படுத் திய சேதத்துக்குச் சோவியத் அரசு தான் பணம் வழங்க வேண்டும் என செக்கோஸ்லா வாக்கிய பிரஜைகள்கூறுகின்ற னர்.

புதிய அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப் பந்தப் படி மூன்றில் ஒருபங்கு இராணுவத்தினர் ஏற்கனவே வாபஸ் பெறப்பட்டனர்.

எஞ்சியுள்ளசோவியத் படை யினர்அடுத்த ஒருவருடகாலத் தில் திருப்பி அழைக்கப்படு வார்கள்.

## இன்றைய உலகில்...

### மத்திய கிழக்கில்

## நிரந்தர அமைதிகாண அமெரிக்கா ஆர்வம்

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு நாடுகளில் நிரந்தர அமைதி ஏற்பட வேண்டுமென்று தாம் கொண் டுள்ள கொள்கைத்திட்டத்தில் எவ்வித மாறுதலும் உருவாக முடியாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலுடன் தொடர்ந்து தாம் கொண்டி ருக்கும் நட்புறவுகளிலும் மாற் றங்கள் உருவாக முடியாது என்று கூறியுள்ள அமெரிக்கா இஸ்ரேலுக்கு தம்மால் வழங் கப்பட்டு வரும் ஆயுத, பொரு ளாதார உதவிகள் நிறுத்தப் படாத நிலையில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகவும் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதான நிலையம் தோற்று விக்க பாலஸ்தீனியர்கள் ஆக்க பூர்வமான சமாதான பேச்சுக் களிலும், முயற்சிகளிலும் ஈடு பட வேண்டுமென்று வலியு றுத்திய அமெரிக்கஉயர் அதி காரி ஒருவர் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள இஸ்ரேலிய அரசுக்கு அமெரிக் காவின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

# சுற்றாடல் மாசுபடுதலை தடுக்க ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கை

(லண்டன்)

கிழக்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகள சுற்றாடல் மாசு படுதலை தடுத்து நிறுத்தும் வகையில் கூட்டாக நடவடிக் கைகளை எடுக்க உள்ளன.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட மகாநாட்டிலேயே இந் நடவடிக்கைக்கான தீர் மானங்கள் கொண்டுவரப் பட்டதுடன், சுற்றாடல் மாசு படுவதின் நிமித்தம் மக்கள் பெருமளவு மரணத்தை எதிர் நோககுவதுடன், ஆறுகள். காற்றுகள் அனைத்தும் அசுத்தமடைவதாகவும் தெரி விக்கப்பட்டது

மேற்படி மகாநாட்டில் கலந்துகொண்ட ஐரோப்பிய பொருளாதார சமூக சுற்றா டல் ஆணையாளர் திரு. காலோடி மேனா இந்த சுற் றாடல் மாசுபடுதல் தொடர் பாக கருத்து தெரிவிக்கையில் ஐரோப்பிய சமூக வாழ்வு, சுகாதாரம் தொடர்பாக தொடர்ந்து பல ஆய்வுகளை தாம் மேற்கொண்டு வருவ தாக தெரிவித்துள்ளார்,

# எரிகின்ற வீட்டில் கொள்ளி பிடுங்கும் வியாபாரிகள்

ஸ்ரீலங்கா அரசாங்கத் தின் கூலிப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை யில் நடைபெற்ற ஒரு வார கால யுத்தம் சனிக்கிழமை (16-06-90) மாலை ஆறு மணி யுடன் ஒரு முடிவுக்கு வந்தது. ஒரு வாரகால யுத்தத்தில் மட்டக்களப்பும், திருகோண மலையும் ஒருகுருஷேத்திரமாக மாறியது. காங்கேசன் துறை யில் ஸ்ரீ லங்கா இராணுவத் துக்கும் புலிகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. யாழ்நகரிலும் பதற்றமும், ஷெல் அடிதளர்ந்த பிறகும், அதற்கு முன்நாளும் ஒருகிலோ சீனிரூபா 32க்கு விற்கப் பட் டது அரிசி ரூபா11 இல்இருந்து ரூபா 20 க்கு விற்கப்பட்டது. கோதுமை மா கிலோ ரூபா 17-50 க்கு விற்பனையாகியது. சந்தையில் ரூபா 965 விற்ற ஒரு மூடை மா ரூபா 1200 முதல் ரூபா 1400 வரை விலை யில் விற்பனையாகியது. மற் றும் படி பலசரக்குச் சாமான் கள், மரக்கறி வகைகளும் யானை விலை விற்றன. இது இப்படியிருக்க சங்கிலித்தொ டர் போல் ஏனைய பண்டங் ... பையிளை மேற்கோள் காட்டு வது போலாகும்.

### நுகர்வோர் சுரண்டல்

நுகர்வோரில் பல ரகங்க ளுண்டு. அன்றாட உழைப் பைக் கொண்டு ஒரு நாள் தேவைக்கு வேண்டிய பண்டங் களை மாத்திரம் வாங்கும் பாவனையாளர் ஒரு ரகம். நடுத்தர வர்க்கத்தின் நுகர்வு நடவடிக்கை மற்றொரு வகை இதைவிடப் பணம் படைத் தவர்களின் சந்தை நடவடிக் கைகளினாலும் இப்பேற்பட்ட சந்தர்ப்பங்களில் சாதாரண பாவனையாளர்களுக்கு ... குத் தெரியாதோ என்னவோ? அல்லது பிறிஸ்ரல் போக மற்றரகச் சிகரெட்டுகளை முதலாளிகள் தாம் விரும்பிய விலைக்கு விற்க வர்த்தர் சங் கம் உடந்தையாகவும், அனுச ரணையாகவும் உள்ளதுபோல் தெரிகிறது. இது இப்படியி ருக்க யானைச் சோடாதான் யாழ்ப்பாணத்தில் விற்பனை யாகிறதா? யானைச்சோடா வின் விலை (இனிப்பு) வரி உட்பட ரூபா 600 என்றும், பிளேன் வரி உட்பட ரூபா 4.50 என்றும் தரப்பட்டுள் ளது. யாழ். நகரில் பிரபல்யம் இல்லாத மிரண்டாவின் விலையும் தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இன்று அதி கம் விற்பனை போகும் கோக் (Coke) பற்றி பட்டியலில் ஒன் றும் தரப்படவில்லை. பதற் றமான நிலையில் அவசரக் கோலத்தின் இந்த விலைப் பட்டியல் எதற்கு?

விலைப்பட்டியலில் சாரா யம் (பனை வரி உட்பட போத்தல் ரூ 93 என்று விலை ...

# இலங்கை சுதந்திரமடைந்த பின்பும் எமது சுதந்திரம் பேணப்படவில்லை

(தீவுப்பகுதி)

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் எமது சுதந் திரம் பேணப்படவில்லை. எமது மக்கள் தமது சுதந் திரத்திற்காக அகிம்சை ரீதி யில் பல போராட்டங்களை நடாத்தியுள்ளனர். இவ் வேளையில் எமது மக்களின் அத்திவாரமான கல்வி, தொழில் திட்டமிட்ட ரீதியில் நசுக்கப்பட்டன இதன் விளை வாக ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. எமது மக்கள் நசுக்கப்படுவதற்கு அன்றைய தமிழ் தலைவர்களும் வழி யமைத்துக் கொடுத்திருக்கின் றார்கள்.

சிறிய கெரில்லா தாக்குதல் மூலம் ஆரம்பமான எமது ... னணி தீவக பொறுப்பாளர் திரு. நரேஸ் தெரிவித்தார்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற் றிய வட மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந் தரலிங்கம் பேசுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் முறையாக வேலணை யிலேயே இந்த கவின் கலை

**நரேஷ்**

விழா நடைபெறுவதையிட்டு நாமெல்லாம் பெருமை கொள்ள வேண்டும். யாழ்ப் பாண நாட்டிற்கு அதிக அள வில் கல்விமான்களையும், கலைஞர்களையும், புத்திஜீவி ... வேளையில் கலைமணம் இங்கு வீசுகின்றது என்றார்.

வேலணை கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் இங்கு உரை யாற்றுகையில் எமது பகுதி யில் தற்போது கல்வியில் பல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெற்றோர்களின்ஒத்துழைப்பு இம் முன்னேற்றத்திற்கு அதிக ஊக்கம் கொடுக்கின் றது. எந்த வகையில் கல்வி யின் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென பெற்றோர்க ளாகிய நீங்களே ஆலோசனை கூறவேண்டும். கிராமப்புற மாணவர்கள் கல்வியில் முன் னேற வேண்டுமென்று கல்வி அமைச்சு புதிய சிந்தனையில் ...

# பிடுங்கும் வியாபாரிகள்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கூலிப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற ஒரு வார கால யுத்தம் சனிக்கிழமை (16-06-90) மாலை ஆறு மணியுடன் ஒரு முடிவுக்கு வந்தது. ஒரு வார கால யுத்தத்தில் மட்டக்களப்பும், திருகோணமலையும் ஒருகுருஷேத்திரமாக மாறியது. காங்கேசன் துறையில் ஸ்ரீ லங்கா இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. யாழ்நகரிலும் பதற்றமும், கெடுபிடியும் ஓரிரு நாட்கள் நீடித்தன. 16ஆம் திகதி அதிகாலை ஆறரை மணியளவில் ஷெல் அடியும், ஹெலிச்சூடும், பீரங்கித் தாக்குதலும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. பதிலுக்கு யாழ் டச்சுக் கோட்டையை நோக்கி புலிகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதேவேளை காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்ந்தன. மக்கள் பயப்பிராந்தியினால் பாதுகாப்பான இடங்களில் புகலிடம் தேடினர்.

### யாழ்நகரில் வர்த்தர்களின் கெடுபிடி

யாழ் நகரில் சனியன்று காலை ஆறரை மணியளவில் தொடங்கிய ஷெல் அடி, ஹெலிச் சூடு, துப்பாக்கி வேட்டு அமர்க்களம் காலை 10 மணியுடன் தணிந்தது. இதேவேளை யாழ். டச்சுக் கோட்டையிலிருந்து சுமார் 1000 மீற்றர்களுக்கு அப்பால் உள்ள வியாபார நிலையங்கள் ஒற்றைக் கதவில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தன. கடைகளில் வழமைபோல் போதிய அளவு பண்டங்கள் கையிருப்பு இருந்தும், பண்டங்களைப் பதுக்கி செயற்கையான ஒரு அருந்தலை ஏற்படுத்தி, பண்டங்களை யானை விலையில் விற்றார்கள். இந்த அமர்க்களத்தில் சாதாரண மக்கள் —பொருளாதார வகையில் குறைந்த வருமானம் பெறுவோர் என்ன செய்வதென்று அறியாது வானத்தை அண்ணார்ந்து பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மனித நேயத்தைமறந்து முற்றிலும் இலாப நோக்கோடு முதலாளிகள் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எரிகிற வீட்டில் கொள்ளி எடுப்பது போலமைந்திருந்தது முதலாளிகள் நடவடிக்கை. தம்இஷ்டப்படி பண்டங்களின் விலையை நிர்ணயித்து வியாபாரஞ் செய்தார்கள். நேற்று ஷெல் அடி தளர்ந்த பிறகும், அதற்கு முன்நாளும் ஒருகிலோ சீனிரூபா 32க்கு விற்கப்பட்டது அரிசி ரூபா11 இல்இருந்து ரூபா 20 க்கு விற்கப்பட்டது. கோதுமை மா கிலோ ரூபா 17-50 க்கு விற்பனையாகியது. சந்தையில் ரூபா 965 விற்ற ஒரு மூடை மா ரூபா 1200 முதல் ரூபா 1400 வரை விலையில் விற்பனையாகியது. மற்றும் படி பலசரக்குச் சாமான்கள், மரக்கறி வகைகளும் யானை விலை விற்றன. இது இப்படியிருக்க சங்கிலித்தொடர் போல் ஏனைய பண்டங்களின் விலைகளும் ஏறின. பிரபல்யமாக ரொட்டிக் கடைகளில் ரூபா 1-50 விற்ற ரொட்டி ஒன்று ரூபா 2க்கு விற்கப்பட்டது. 60 சதம் விற்ற இடியப்பம் 75சதமாகவும், 75 சதம் விற்ற பிட்டு ரூபா 1-00க்கும் விறகப் பட்டன. நிலமை வழமைக்குத் திரும்பிய பிறகும் நேற்றுக் காலை வரை ஏறிய விலையில் இறக்கம் காணப் படவில்லை. சிகரெட் விலையும் அப்படித்தான். பிறிஸ்ரல் சிகரட் விலை ரூபா 2 ஆக விலை ஏறியது. நேற்றுக் காலை வரை அதே விலையில் தான் விற்பனையாகியுள்ளது. எரிபொருட்களாக பெற்றோலும், மண்ணெண்ணையும் போன இடமே தெரியவில்லை. சிலின்டர் எல் காஸ் வழமையாக ரூபா 185க்கு விற்பனையானது. ஆனால்,நேற்று முன் தினம் அமர்க்களத்தில் ரூபா 200 முதல் ரூபா 280 வரை விலையில் விற்பானையாகியுள்ளது. இடத்துக்கிடம்விலை வித்தியாசம் அவ்வளவு தான். சகலரும் பயன்பெறக் கூடிய வகையில் நியாயமான விலையில் பொருட்களை விற்பது தானே?-என்று கட்டுரையாளர் ஒரு பலசரக்கு வியாபாரியை அணுகிக்கேட்ட போது, நியாயமான விலையில் விற்றால் பண்டங்கள் எல்லோருக்கும் கிடைக்காது. விலையை அதிகரித்தால், நுகர்வோர் கொள்வனவு செய்யும் பண்டங்களின் அளவைக் குறைப்பார்கள். அதனால் எல்லோரும் பண்டங்களை வாங்கக் கூடியதாகவிருக்கும் என்றார். தன்னையும், தனது மோசடி நடவடிக்கைகளையும் நியாயப் படுத்த முதலாளி தன் அனுபவத்தில் ஒரு பொருளாதார விதியை பரம்பல்- விநியோக விதியிலிருந்து (Low of Demnd & Supply) ஏற்படுத்தியுள்ளார். இது பிசாசு பைபிளை மேற்கோள் காட்டுவது போலாகும்.

### நுகர்வோர் சுரண்டல்

நுகர்வோரில் பல ரகங்களுண்டு. அன்றாட உழைப்பைக் கொண்டு ஒரு நாள் தேவைக்கு வேண்டிய பண்டங்களை மாத்திரம் வாங்கும் பாவனையாளர் ஒரு ரகம். நடுத்தர வர்க்கத்தின் நுகர்வு நடவடிக்கை மற்றொரு வகை இதைவிடப் பணம் படைத்தவர்களின் சந்தை நடவடிக்கைகளினாலும் இப்பேற்பட்ட சந்தர்ப்பங்களில் சாதாரண பாவனையாளர்களுக்கு இடர்கள் ஏற்படுவதுண்டு. பணம் படைத்தவர்கள் பண்டங்கள் யானை விலை விற்றாலும் மூடைக்கணக்கிலும், தேவைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்வதாலும் ஒரு செயற்கையான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதைக் கடையொன்றில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நெருக்கடியான நேற்று முன்தினம் மொத்தமாக பெருமளவில் வாங்குபவர்களுக்கு கடையில் முதலாளி முன்னுரிமை வழங்கியதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. 1/4, 1/2 கிலோ என்று கேட்டவர்கள் கவனிப்பாரற்று விடப்பட்டார்கள் குறுகிய நேரத்தில் அதிகபட்ச இலாபத்தைப் பெறுவது முதலாளிகளின் நோக்கம் அவ்வளவு தான்! உலகத்தின் தத்துவங்களை எல்லாம் வயிற்றை வைத்துக்கொண்டு அளந்து விடலாம் என்பார்கள். ஆனால், பதற்றமான ஒரு சூழ்நிலையில் ஏழைகளான பாவனையாளர் கஷ்டத்துக்குள்ளாவதை எந்தத் தத்துவத்தைக் கொண்டு விளக்குவது?

### வர்த்தகர் சங்கமும் விலைப்பட்டியலும்

பதற்றம் நிலவிய சூழ்நிலையில் யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் மொத்த விற்பனை விலைப்பட்டியல் என்ற பெயரில், 15 ஜூன் 1990 திகதியிட்ட செய்தியறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இவ்விலைப்பட்டியல் ஏனோதானோ என்ற கண்துடைப்பு நடவடிக்கை போல் தெரிகிறது. அந்த விலைப்பட்டியலில் குடிவகைகள் (மதுபானம்), சோடா (யானை) சிகரெட் விலைகள் தரப்பட்ள்ளன சிகரெட் விலைப் பட்டியலில் பிறிஸ்டல் சிகரெட்டின் மொத்த விலை மட்டும் தரப் பட்டுள்ளது. வரி உட்பட ரூபா 339 என்று விலை தரப் பட்டுள்ளது மற்ற ரகச் சிகரட்டுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனையாவது தலைவருக்கு விலைக்கு விற்க வர்த்தர் சங்கம் உடந்தையாகவும், அனுசரணையாகவும் உள்ளதுபோல் தெரிகிறது. இது இப்படியிருக்க யானைச் சோடாதான் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகிறதா? யானைச்சோடாவின் விலை (இனிப்பு) வரி உட்பட ரூபா 600 என்றும், பிளேன் வரி உட்பட ரூபா 4.50 என்றும் தரப்பட்டுள்ளது. யாழ். நகரில் பிரபல்யம் இல்லாத மிரண்டாவின் விலையும் தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இன்று அதிகம் விற்பனை போகும் கோக் (Coke) பற்றி பட்டியலில் ஒன்றும் தரப்படவில்லை. பதற்றமான நிலையில் அவசரக் கோலத்தின் இந்த விலைப் பட்டியல் எதற்கு?

விலைப்பட்டியலில் சாராயம் (பனை வரி உட்பட போத்தல் ரூ 93 என்று விலை தரப்பட்டுள்ளது. ஆனால், யாழ்ப்பாணத்தில் பதற்றம் நிலவிய நேற்று முன்தினமும், அதற்கு முன்பும் பனஞ்சாராயத்தின் விலை ரூபா 100 முதல் ருபா 110வரை விற்பனையாகியுள்ளது மெண்டிஸ்ஸ் பெஷல் வரி உட்பட போத்தல் ஒன்று ரூபா 129-50 ஆனால் அதன் மொத்த விற்பனை ரூபா 175 வரை விற்றுள்ளார்கள். சில்லறையில் ரூபா 200வரை மதுச்சாலைகளில் விற்பனையாகியுள்ளன. மதுவைப் பொறுத்தவரை ஏறிய விலை இறங்கிய அறிகுறிகள் இல்லை

### போக்கு வரத்து

பத்திரிகைச் செய்தி ஒன்று பின்வருமாறு கூறுகிறது. கொல்லங்கலட்டிக்குச் செல்ல ரூபா 600. யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து கொல்லங்கலட்டிக்குச் செல்ல ஒரு ஓட்டோகாரர் ரூபா 600 கேட்டாராம் பெற்றோல் ஒரு போத்தல் ரூபா 75 எனவும், அதற்கு குறைவாகக் கட்டுப்படியாகாது எனவும் அச் சாரதி கூறினார்.

இத்தொகையானது வழமையாக பெறப்படும் தொகையைவிட நான்கு மடங்கு அதிகம். அதேவேளை யாழ்ப்பாணத்தில் ஓட்டோக்கூலி ஒப்பீட்டு ரீதியில் ஏனைய இடங்களைவிட அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாட்டின் குழப்பம் சிலருக்கு லாபம், சிலருக்கு நட்டம்.

### பணக்காரர்களான வர்த்தகர்கள் மனோநிலை

இயேசுவிடம் ஒருவர் போய் 'நான் முடிவில்லா வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். இயேசு அவனை உற்றுநோக்கி ''...... போய்உனக்குஉள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடு. வானத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும் பின்பு வந்து என்னைப் பின் செல்'' என்றார். அவன் இவ்வார்த்தையைக் கேட்டு முகம் வாடி, வருத்தத்துடன் சென்றான் உள்ளதை விற்க விருப்பமில்லை. எமது வர்த்தகர்களின் மனோநிலையும் இதுகான். மனித நேயம் என்பதுகிடையாது. பணத்தை மேலும் பெருக்குவது தான் வர்த்தகரின் நோக்கம்.

**நக்கீரன்**

# எமது சுதந்திரம் பேணப்படவில்லை

(தீவுப்பகுதி)

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் எமது சுதந்திரம் பேணப்படவில்லை. எமது மக்கள் தமது சுதந்திரத்திற்காக அகிம்சை ரீதியில் பல போராட்டங்களை நடாத்தியுள்ளனர். இவ்வேளையில் எமது மக்களின் அத்திவாரமான கல்வி, தொழில் திட்டமிட்ட ரீதியில் நசுக்கப்பட்டன இதன் விளைவாக ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. எமது மக்கள் நசுக்கப்படுவதற்கு அன்றைய தமிழ் தலைவர்களும் வழியமைத்துக் கொடு திருக்கின்றார்கள்.

சிறிய கெரில்லா தாக்குதல் மூலம் ஆரம்பமான எமது போராட்டம் இன்று ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் ஒன்றை உருவாக்கியதுடன் உலகமே வியக்கும் வண்ணம் ஏழு கோடி தமிழ் மக்களின் பலம் பொருந்திய இராணுவ அமைப்பாக விளங்குகின்றது என்றால் அதன் பெருமை தலைவர் பிரபாகரனையே சாரும் என்பதில் ஐயமில்லை.

எமது வெற்றிக்கு மக்கள் உறுதுணையாக இருந்திருக்கின்றார்கள் என்பதை கூறிக்கொள்வதுடன் அன்றைய மாணவர்கள்தான் இன்றைய போராளிகள் எனவே எதிர்காலத்தில் எமது போராட்டத்தில் மாணவர்களை இணைக்கவேண்டியபொறுப்பு புத்திஜீவிகளிடமும் கல்விமான்களிடமுமே உண்டு.

எமது பாரம்பரியமான சிதைந்துபோன கலை, கலாச்சாரங்களை கட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. எமது மத்தியிலிருந்த புத்தி ஜீவிகளும் கல்விமான்களும் அழிக்கப்பட்டு விட்டனர். இன்றைய மாணவர்களைப் புத்தி ஜீவிகளாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே உண்டு.

இன்றைய சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் விதத்தில் இங்கு இடம்பெற்ற ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிகழ்ச்சிகளை அமைத்த வேலணைகோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு எமது பாராட்டுக்கள்.

இவ்வாறு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வேலணை கல்விக் கோட்ட கவின் கலை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தீவக பொறுப்பாளர் திரு. நரேஸ் தெரிவித்தார்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய வட மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பேசுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் முறையாக வேலணையிலேயே இந்த கவின் கலை விழா நடைபெறுவதையிட்டு நாமெல்லாம் பெருமை கொள்ள வேண்டும். யாழ்ப்பாண நாட்டிற்கு அதிக அளவில் கல்விமான்களையும், கலைஞர்களையும், புத்தி ஜீவிகளையும் பெருமளவில் உருவாக்கி தந்த பெருமை தீவுப் பகுதியையே சாரும். இந்த விழா வேலணையில் நடைபெறுவது பாராட்டத்தக்கது. தமிழ் மக்கள் பல இன்னல்களுக்குட்பட்டிருக்கும் இவ்வேளையில் கலைமணம் இங்கு வீசுகின்றது என்றார்.

வேலணை கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் இங்கு உரையாற்றுகையில் எமது பகுதியில் தற்போது கல்வியில் பல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெற்றோர்களின்ஒத்துழைப்பு இம் முன்னேற்றத்திற்கு அதிக ஊக்கம் கொடுக்கின்றது. எந்த வகையில் கல்வியின முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென பெற்றோர்களாகிய நீங்களே ஆலோசனை கூறவேண்டும். கிராமப்புற மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமென்று கல்வி அமைச்சு புதிய சிந்தனையில் செயல்படுகின்றது என்றார்.

கவிஞர் பொன் ஸ்ரீ வாமதேவா, கல்வி அதிகாரி திரு. எஸ். சண்முகநாதன் கல்வி அதிகாரி திரு. கணபதிப்பிள்ளை உடபட பலர் உரையாற்றினர். (15)

**நரேஷ்**

# போதைப் பொருளுடன் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொம்பனி வீதியில் வாழும் இரு தமிழ் இளைஞர்களிடமிருந்து ஐந்து கிலோ போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சில தினங்களுக்கு முன்னர் கொட்டாஞ்சேனை விடுதியொன்றில் இருந்த தமிழ் பெண்மணி ஒருவரிடம் இருந்தும், மூன்று கிலோ போதைப் பொருள பொலிஸாரால் கைப் பறறப்பட்டுள்ளன.

இந்த இரு தமிழ் இளைஞர்களும் முறையே திருக்கோணமலை யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

# பிரேஸில் வெற்றி

சனிக்கிழமை நடைபெற்ற 'சி' பிரிவு ஆட்டமொன்றில் பிரேஸில் கோஸ்டாரிக்காவை 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது. இதே பிரிவு இன்னொரு ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து சுவீடினை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. 'எப்' பிரிவு ஆட்டமொன்றில் இங்கிலாந்தும் ஒல்லாந்தும் கோல்கள் ஏதுமின்றி சமம் செய்து கொண்டன. இங்கிலாந்தும் ஒல்லாந்தும் தாம் ஆடிய இரண்டு ஆட்டங்களிலும் டிரா செய்துகொள்ள மட்டுமே முடிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிரேஸில் தனது வெற்றியுடன் 2வது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இன்றைய ஆட்டங்கள்:- பிரிவு 'பீ' ஆர்ஜென்டீனா-ருமேனியா கமரூன்-சோவியத் ரஷ்யா இவ்வாட்டங்களுடன் 'பீ' பிரிவு ஆட்டங்கள் அனைத்தும் முடிவுறும்.

# இசை நாடகப் போட்டி

(கொழும்புத்துறை)

யா. மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாச கல்வி கலை கலாசார விழாவையொட்டி நடாத்தப்படும் போட்டிகளுக்கான முடிவு திகதி இம் மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று கல்வி, கலை, கலாசாரக் குழுத் தலைவர் கவிஞர் தேவதாசன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்படும் மரபு வழி இசை நாடகத்துக்கு முதற் பரிசாகத் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்றும், கட்டுரைப் போட்டி இம் மாதம் 30 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(24)

## 1989இல் ஏழு நிதி நிறுவனங்கள் மூடப்பட்டன

(கொழும்பு)

மத்திய வங்கியால் ஏழு நிதி நிறுவனங்கள் 1989 ஆம் ஆண்டில் மூடப்பட்டதாக மத்திய வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுவது வெற்றிகரமாக நடைபெறுவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள நிதி நிறுவனங்கள் நாட்டில்பிரச்சினைகள் இருந்த காலத்தில் கணிசமான லாபத்தை பெற்றன எனவும் அவர் சொன்னார்.

1987 ஆம் 1988 ஆம் ஆண்டுகளில்நிதிநெருக்கடிகளைஎதிர்நோக்கிய நிதிநிறுவனங்கள்மத்திய வங்கியால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப, முகாமைத்துவ உதவிகளின் பயனாக நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன.

இத்தகைய நிதி நிறுவனங்களின் மொத்த வைப்புப் பணம் 626 கோடி ரூபாவிலிருந்து 652 கோடி ரூபாவாக அதிகரித்தது.

இவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய தனியான பிரிவு ஒன்று செயற்படுகிறது. இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

## ஜனசக்தி குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகலதபாற்கந்தோர்களிலும் பணிபுரிய ஜனசக்தி பெறும் குடும்பங்களைச்சேர்ந்தவர்களை அமர்த்தத் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

### இந்திய வானொலி

## 500பேருக்கு மேல் இறந்ததாகத் தகவல்

(கொழும்பு)

கடந்த ஆறு நாட்களாக வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆயுதப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நடைபெற்ற சண்டையினால் ஐநூறு பேருக்குமேல் இறந்துள்ளதாக அகில இந்திய வானொலி அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் போராளிகளில் இருந்து ஆறு நாட்களில் ஐம்பத்தைந்து பேர் இறந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகளின் பிரமுகர் ஒருவர் சொன்னதாக யு.என்.ஐ செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.


## பிடவை மின்தறி நிலையம்

- மின்தறியில் வேலைசெய்து அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை
- அனுபவமற்றவர்களுக்கும் வேதனத்துடன் பயிற்சி அளிக்கப்படும்
- தங்குமிட வசதிகள் உண்டு

நேரில் வரவும்

**லீனா ரெக்ஸ் இன்டஸ்ரி**

(லங்கா) லிமிட்டெட்

புத்தூர்.

(B/1181)


## வடக்கு, கிழக்கு மற்றும் வெளிமாவட்டப்பகுதிகளில் சிறீலங்கா முப்படைகளின் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளான பொதுமக்களின் கவனத்திற்கு.

வடக்கு, கிழக்கு மற்றும் வெளிமாவட்டப் பகுதிகளில் கடந்த 11-06-90இல் இருந்து 16-06-90 வரை நடைபெற்ற சிறீலங்காவின் பாதுகாப்புப் படைகளின் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளான பொதுமக்களிடமிருந்து கீழ்க்காணும் விபரங்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உடனடியாக திரட்டவிருப்பதால் கீழ்க்காணும் விபரங்களை தந்துதவுமாறு பொதுமக்களை முன்னணி கேட்டுக் கொள்கிறது.

1) பாதிப்பு நிகழ்ந்த நாள் :-
2) பாதிப்பு நிகழ்ந்த இடம் :-
3) பாதிப்பு எத்தன்மையானது :-
4) பாதிப்பு யாரால் ஏற்படுத்தப்பட்டது :-
(பொலிஸ் / இராணுவம் / கடற்படை / விமானப்படை / காடையர்கள்)

அ) உயிரிழந்தவரின் பெயர், வயது, முகவரி, அவரது குடும்ப விபரம் போன்றவை தரப்பட வேண்டும்.
ஆ) காயமுற்றோர் / ஊனமுற்றோர் பெயர், வயது, முகவரி, குடும்ப விபரம் போன்றவை தரப்படவேண்டும்.
இ) காணாமற் போனவர் விபரம், பெயர், வயது, முகவரி, குடும்ப விபரம்.
ஈ) கைதுசெய்யப்பட்டோர் விபரம், பெயர், வயது, முகவரி குடும்ப விபரம் (யாரால் எப்போது, எவ்விடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்ற விபரம் தரப்பட வேண்டும்)
உ) பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டவர்கள் விபரம், பெயர், வயது, பால், முகவரி குடும்ப விபரம்.
ஊ) படையினரின் நடவடிக்கைகளால் இழந்த சேதமாக்கப்பட்ட சொத்துக்களின் விபரங்கள். (சொத்து இழப்பின் பெறுமதிகளை தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடவும்)

பாதிப்பிற்குள்ளானவர்கள் மேற்படி விபரங்களைத் தயாரித்து அந்தந்த மாவட்டங்களிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகங்களுக்கு தாமதிக்காமல் அனுப்பி வைக்கவும்.

**மாவட்டச் செயலகங்களின் முகவரிகள்:-**

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பிரதான வீதி,
கல்முனை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
மணல்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
டிப்போ வீதி,
கனகபுரம்,
கிளிநொச்சி.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தலைமைச் செயலகம்,
தர்மபுரம்,
கிளிநொச்சி.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
122, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
வைரவப் புளியங்குளம்,
வவுனியா.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பழையபூங்கா வீதி,
மன்னார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பலாலி வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- மேற்படி விபரங்களைத் தயாரித்து தாமதிக்காமல் எமக்குக் கிடைக்கச் செய்வதற்கு சமூகசேவகர்கள், நலன் விரும்பிகள், சிற்றூர் அவை உறுப்பினர்கள், பொதுமக்கள் யாவரும் உதவவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுச்செயலாளர்,
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி.


வீடியோ படப்பிடிப்புத் துறையில் முன்னணியில் திகழ்பவர்கள்

## லீனா ரெக்ஸ் இன்டஸ்றி

(லங்கா) லிமிட்டெட்

புத்தூர்.

(B/1181)

கனகபுரம், கோண்டாவில்,
கிளிநொச்சி. யாழ்ப்பாணம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தலைமைச் செயலகம்,
தர்மபுரம்,
கிளிநொச்சி.

குறிப்பு:- மேற்படி விபரங்களைத் தயாரித்து தாமதிக்காமல் எமக்குக் கிடைக்கச் செய்வதற்கு சமூகசேவகர்கள், நலன் விரும்பிகள், சிற்றூர் அவை உறுப்பினர்கள், பொதுமக்கள் யாவரும் உதவவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுச்செயலாளர்,
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி.

வீடியோ படப்பிடிப்புத் துறையில் முன்னணியில் திகழ்பவர்கள்

# வீடியோ விஷன் நிறுவனத்தினர்,

உங்கள் வாழ்வின் உன்னத நிகழ்வுகளை கலைத்துவம் மிக்கதாய்
தனித்துவ தொழில் நுட்ப உதவியுடன் அனுபவமிக்க கலைஞர்களால்
வீடியோ படமாக்கித் தருவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள்

# Video Vision

* நவீன வீடியோ கமராக்கள்
* நவ நவீன மிக்ஸர் கருவிகள்
* புதுமையும், வியப்புமூட்டும் சாதனங்களின் உதவியுடன் உன்னத படப்பிடிப்பு

காலாகாலத்திற்கும் உங்கள் மனதில் நீங்காத நினைவுகளுடன் ரீங்காரமிடும்

ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நுட்பங்கள்...

# வீடியோ விஷன்

245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B/1182)

### சிந்தனைக்கு

எச்சரிக்கை எனும் முழுப்பாலைவனத்துக்குச் சமமானது. அனுபவம் என்ற ஒருமுள்.

— ஜேம்ஸ் ரஸ்ஸல் லோவெல்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 18-06-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

## ஆறுநாள் போரின் அனுபவம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப்புலிப் போராளிகளுக்குமிடையில் ஆறுநாட்கள் உக்கிரமாக நடந்த போர் நிறுத்தப்பட்டு இருக்கிறது.

''போர்நிறுத்தம்'' என்றால் களைப்புத் தீர்ந்து இழப்புக்களை நிரப்பி மீண்டும் ஒரு உரமான போருக்கு இரு பகுதியினரும் தங்களைத் தயார் செய்து கொள்வதுதான் எங்கும் கடந்த காலங்களில் அர்த்தமாக இருந்திருக்கிறது.

ஆறுநாள் போருக்குப்பின் ஏற்பட்ட போர்நிறுத்தம் நிரந்தரப் போர் நிறுத்தமாக இருக்க வேண்டும். இது அரசாங்கத்தின் கையில்தானிருக்கிறது.

அரசாங்கத்தின் முப்படைகளும் காவல்படையும் பெரும் தாக்குதல்களை நடத்தினர். விடுதலைப்புலிப் போராளிகள் தரையில் மட்டுமே நின்று போரிட்டனர். அரச படைகளின் கண்மூடித்தனமான மொஸாட் பாணித் தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

உலகின் நாலாவது பெரிய படையைக் கொண்ட இந்தியப்படையுடன் விடுதலைப்புலிகள் போரிட்டு வெற்றியும் கண்டனர். விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்தியப்படைத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி ''புலிகளின் ஆட்பலத்தையும்ஆயுதபலத்தையுமே நாம் கணிப்பிட்டோம்; அவர்களின் மனோபலத்தைக் கணிப்பிடத்தவறிவிட்டோம்'' என்று கூறியிருந்தார்.

ஆறுநாள் போரில் இலங்கைப் படைத்தளபதிகளும் இலங்கைஅரசும் விடுதலைப்புலிகளின் மனோபலத்தையும் கணிப்பிட்டிருப்பார்கள்.

போர்நிறுத்தம் ஏற்படுவதற்கும் பேச்சுவார்த்தைமூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நீதி அமைச்சரும் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீது பெரும்பணியாற்றியிருக்கிறார்.

போர் உச்சக்கட்டத்தை அடைந்துகொண்டிருந்த சமயத்தில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து போர் நிலைமையை எடுத்துக் கூறியிருக்கிறது அரசு.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து அவர்களுக்குப் போர்நிலையை எடுத்துக்கூறி அரசின் நடவடிக்கைகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறார் பிரதமர் டி. பி. விஜயதுங்கா.

இப்பொழுது போர் நின்றிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டுத் தூதர்களையும்

# பாடங்கள், தொழில்கள் தெரிவில் ஆண்கள்

# பெண்களுக்கிடையில் சமமின்மை

யாழ்ப்பாண மக்கள் மாற்றங்களை விரும்பாத புரட்சிகளை எதிர்க்கும் மனப்பாங்குடையோர் என கூறப்படுவதுண்டு. இதில் அதிக உண்மையுண்டு. ஓரளவு திருத்தம் இருந்தபோதிலும் சாதிக் கட்டுப்பாடு இங்கே வலுவுடையதாகவேஇருக்கின்றது. இந்த வகையில் யாழ்ப்பாண தமிழர் சமுதாயம் இலங்கையிலேயே மிகவும் கீழான நிலையில் உள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்கு கத்தோலிக்கப் பாடசாலைகளும் மிகவும் குறைந்தளவு பங்களிப்பையே செய்துள்ளன. முழுச் சனத்தொகையிலும் தாழ்த்தப்பட்டோர் என்றுகூறப்படும்மாணவர்க்ளில் எத்தனை வீதமானோர் யாழ்ப்பாண கத்தோலிக்கப் பிரபல்யமான கல்லூரிகளில் படிக்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து எத்தனை ஆசிரியர்கள் படிப்பிக்கின்றார்கள்? இந்த வேறுபாட்டை நீக்கி, சாதிகளை ஒன்றிணைக்கும் அல்லது பொருளாதார ரீதியில் வேறுபாட்டை நீக்கும் ஏதாவது திட்டங்கள் தான் உண்டா?

> ''யாழ்ப்பாணத்தில் சாதி அடக்குமுறையும் பெண்களின் தாழ்ந்த நிலையும்'' என்னும் தலைப்பில் கலாநிதி தேவநேசன் நேசையாவால் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நிகழ்த்தப்பட்ட உரையின் சில பகுதிகள்.

யாழ்ப்பாணப் பெண்கள் கட்டுப்பாட்டாலும், மட்டுப்படுத்தலாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற போதிலும், இதில் அபிப்பிராயம் மாறுபட்டுள்ளது. இந்துக்களாலும், கிரேக்கர்களாலும் கல்வியின் கடவுள் பதவி பெண்ணினத்துக்கேகொடுக்கப்பட்டுள்ளது. கல்வியின் கடவுள்களாக சரஸ்வதியும்,அதீனும்இருந்தபோதிலும் பெண்கள் கல்வி விடயமாக பல தரப்பட்ட இடர்பாடுகளே உள்ளன. சிலதடைகள் மற்றும் இடங்களைப் போலவே யாழ்ப்பாணத்திலும் குறைக்கப்பட்டுள்ளன. உண்மையில் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கல்விக்குக் கிடைத்த புதுச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதில் இந்தப்பகுதி மக்கள் முன்னார்வம் காட்டினார்கள் தென் ஆசியாவிலேயே பழைமையானதும், சிறந்ததுமான பெண்கள் கல்லூரிகள் யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. அன்றிலிருந்து பெண்கள் பாடசாலைகள் எண்ணிக்கையில் அதிகரித்ததுடன், வளர்ச்சியுமடைந்தன.

ஆனால் பாடங்களைத் தெரிவுசெய்வதிலும்,தொழில்களைத் தெரிவு செய்வதிலும் ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் இடையில் சமமின்மையைக் கருத்திற் கொண்டே அதை அடிப்படையாக வைத்தே குழந்தைகளுக்கு வழிகாட்டலும், ஊக்கமளித்தலும் அதிகமான பெற்றோரும், பாடசாலைகளும் தொடர்ந்து பின்பற்றுகின்றனர். உயர்ந்தபதவிக்கான பொறுப்புள்ள, நல்ல எதிர்காலமுள்ள பாடங்களை தெரிவு செய்வதில் ஆண்கள் ஊக்கப்படுத்தப்படும் அதே வேளையில் அதிக விவேகம் தேவைப்படாததும், தொழில் ரீதியில் நல்ல எதிர்காலமற்றதுமான பாடங்களைத் தெரிவு செய்யவே பெண் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இப்படியான பேதம் காட்டுதல் இருந்தபோதும், ஸ்ரீலங்கா வைத்தியக் கல்லூரியில் ஆண்களுக்குச்சமமான அளவு பெண்களும் சேர்ந்திருக்கிறார்கள் என்பது பெருமைப்பட வேண்டிய விஷயமாகும். இதுவிடயத்தில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் நாம் முன்னணியில் இருக்கிறோம். உயர் கல்வி விஷயத்தில் வளர்ந்த நாடுகளில் ஆண்களே மிகக் கூடிய இடத்தை வகிக்கின்றனர். சில சிறு இடையூறுகள் இருந்தபோதும் சம சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் ஆண்கள் அளவோ அல்லது அதிலும் கூடவோ தம்மால் முடியுமென்பதை நிரூபித்த பெண்கள், ஆண்களுடன் தமக்கும் சம சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்ற கொள்கையில் வெற்றி அடைந்திருக்கிறார்கள்.

> பாடங்களைத் தெரிவு செய்வதிலும் தொழில்களைத் தெரிவு செய்வதிலும் ஆண்பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையில் சமமின்மையை கருத்திற் கொண்டே அதை அடிப்படையாக வைத்தே குழந்தைகளுக்கு வழி காட்டலும் ஊக்கமளித்தலும் அதிகமான பெற்றோரும் பாடசாலைகளும் தொடர்ந்தும் பின்பற்றுகின்றனர். உயர்ந்த பதவிக்கான பொறுப்புள்ள நல்ல எதிர்காலமுள்ள பாடங்களைத் தெரிவுசெய்வதில் ஆண்கள் ஊக்கப்படுத்தப்படும் அதே வேளையில் அதிக விவேகம் தேவைப்படாததும் தொழில் ரீதியில் நல்ல எதிர்காலமற்றதுமான பாடங்களை தெரிவு செய்யவே பெண் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இப்படியிருந்த போதிலும், பெண்களின் தொழில் விஷயத்தில் சமுகம் பல இடையூறுகளைப்போடுவது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இப்படியான தடைகளை நீக்குவதில் வளர்ந்த நாடுகளிலும் பார்க்க நாம் கீழான நிலையிலேயே இருக்கிறோம். சில தொழில்களிலிருந்து பெண்கள் ஒதுக்கப்பட்டிருக்கும் அதேவேளையில் மற்றும் சில தொழில்களுக்கு மட்டும் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சமயம் தொடர்பான வேலைகளில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் குருப்பட்டம் பெறுவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்

வைத்தியத்துறையிலும் கூட பெண்கள் பிள்ளைப்பேறு, பெண்கள் நோய்த்துறையில் பாண்டித்தியம்பெற ஊக்குவிக்கப்படுவார்களேயன்றி பொதுரண சிகிச்சைத் துறைக்கு ஊக்கப்படுத்தப் படமாட்டார்கள். பொறுப்பும், பதவியுயர்வு வாய்ப்புமுள்ளவராக ஒரு ஆண் பொறியியலாளர் இருக்கும்போது முன்னேறும் வாய்ப்பும், பொறுப்புமற்ற மேசை வேலைக்கு மட்டும் பெண் பொறியியலாளர் இருப்பார். சட்டத்துறையிலும்இதேநிலை தான். தாங்களே தங்கள் கேசை நடத்தாமல், ஆண் அப்புக்காத்தர்களுக்கு உதவிசெய்வோராய்காணப்படுகின்றனர். ஒருகாலத்தில் சிவில்சேவைக்கு பெண்கள் அனுமதிக்கப்படாதிருந்தபோதிலும், தற்போது அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் எனது அறிவிற்கு எட்டியவரை ஒரே ஒருவர் மட்டும் அரசாங்க அதிபராய் நியமிக்கப்பட்டுள்ளார். கபினெற் இலாகாவின் செயலாளராக ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை.

தொழில் முறையில் முன்னேற்றம் அடைய முடியாத இடைஞ்சல்கள் பெண்களுக்கு எல்லா நாடுகளிலும் ஓரளவு இருக்கிறது. உலகெங்கும்பெண்களில் பெரும்பகுதி ஆசிரிய, தாதி, வாசிகசாலை தொடர்பான காரியதரிசி. சமுகப்பணி தொழிற்சாலைகளின்சிலகுறிக்கப்பட்டதொழில்கள், தைத்த ஆடை சம்பந்தமான தொழில்களில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இந்தத் தொழில்கள் எல்லாம் பெண்களுக்கு ஏற்றதல்ல என ஒருவராலும் கூற முடியாதுதான். ஆனால் நான் கூறுவது என்னவென்றால் பெண்கள் தாங்கள் பங்குபற்றக் கூடிய துறைகளைக் கூட்டி அவைகளில் ஈடுபட்டுத் தங்கள் திறமைகள் ஆண்களினுடையதிலும் பார்க்கக் கூடியது என்பதை ஆண்களுக்கு ஒதுக்கப்பட்ட அத்துறைகளிலும் காட்டவேண்டும் என்பதே.

புதுப்பாதைகளில் போவதற்குத் தற்போது நிலைமை சரி இல்லை என்று சிலர் எதிர்க்கலாம். நிலைமை திருந்தும் வரை பெண்கள் தம் வழமையான தொழில்களையேசெய்ய வேண்டும் என்றும் கூறலாம். நிலைமைகள் சீரடையாததால் தான் புதுச்சந்தர்ப்பங்களும், வாய்ப்புக்களும் ஏற்பட்டன வென்றும், இச்சந்தர்ப்பத்தை நாம் தவறவிடாது பற்றிக் கொள்ள வேண்டுமென்றும் பெண்கள் சார்பில் வாதிடப்படலாம். இந்தக் கருத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள் பல நாடுகளில்நிகழ்ந்திருக்கின்றன. உதாரணத்துக்குப் பிரான்ஸ், பனன், அல்ஜீரியப் ...

## வட்டு. தொ. நுட்பக்கல்லூரியில் அடாவடித்தனம்

ஆசிரியர்,
ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

... சிக்கான ஒழுங்குகளைசெய்யும் படி அனுமதியும் தரப்பட்டது.

மாணவதலைவருக்கு பொதுக் கூட்டத்தில் மன்னிப்பு கோரும் படியும் நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டது. தலைவருக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின்படி அவர் நடப்பதாக ...

உரை முடிந்ததும் மீண்டும் மன்றத்தின் ஆலோசகர்கள் எழுந்து தலைவர் என்ற ரீதியில் மன்னிப்பு கோருவதை விடுத்து தனிப்பட்ட ரீதியில் மீண்டும் மன்னிப்பு கேட்கும் படியும் இல்லையேல் தலைவர் பதவி பறிக்கப்படும் எனவும் கூறினார்கள்

ஆறுநாள் போரில் இலங்கைப் படைத்தளபதிகளும் இலங்கைஅரசும் விடுதலைப்புலிகளின் மனோபலத்தையும் கணிப்பிட்டிருப்பார்கள்.

போர்நிறுத்தம் ஏற்படுவதற்கும் பேச்சுவார்த்தைமூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நீதி அமைச்சரும் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது பெரும்பணியாற்றியிருக்கிறார்.

போர் உச்சக்கட்டத்தை அடைந்திருகொண்டிருந்த சமயத்தில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து போர் நிலைமையை எடுத்துக் கூறியிருக்கிறது அரசு.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து அவர்களுக்குப் போர்நிலையை எடுத்துக்கூறி அரசின் நடவடிக்கைகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறார் பிரதமர் டி. பி. விஜயதுங்கா.

இப்பொழுது போர் நின்றிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டுத் தூதர்களையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்து இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கு அவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் நாடலாமே!

தமிழ்ப்பகுதிகளில் சிங்களப் பொலிசாரை வைத்திருப்பதும் ஆயுதப்படைகளை வைத்திருப்பதும் நாட்டில் நிரந்தர சமாதானத்துக்கு இடையூறாகவே இருக்குமென்பதை எதிர்க்கட்சியினருக்கு அரசு எடுத்துச் சொல்லக் கூடாதா?

ஆறுநாள் போர் மற்றொரு முக்கிய பிரச்சினையையும் எடுத்துக்காட்டி உணர்த்தியிருக்கிறது.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள்.

எதற்காக இவர்கள் இப்படிக் கேட்கிறார்கள் என்பதை ஆறுநாள் போர் தெளிவாக்கியிருக்கிறது.

புலிகளிடம் ஆயுதம் இல்லாதிருந்தால் அரசபடைகள் சுலபமாகத் தமிழ்ப் பகுதிகளுக்குள் நுழைந்து கொலை, கொள்ளை, மற்றும் சகல அட்டூழியங்களையும் கட்டவிழ்த்துவிட்டுத்தமிழ்மக்களை அடிமைப்படுத்திவிடலாம்.

தமிழ்மக்களை சொந்த மண்ணிலேயே அகதிகளாக அநாதைகளாக ஆக்கிவிட்டு தமிழ்மண்ணை பலவந்தமாகப் பறித்தெடுக்கலாம்.

விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களிருப்பதால்தான் ஆறுநாள் போரில் அரசபடைகள் தமிழ்ப் பகுதிகளில் தாம் விரும்பியதைச் செய்ய முடியாது போனது.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழேபோடுவதற்குப் பதிலாக மேலும் பலநவீன ஆயுதங்களை வைத்திருக்க வேண்டியது அவசியமென்பதையே இந்த ஆறுநாள் போர் உணர்த்தியிருக்கிறது.

---

யாழ்ப்பாணப் பெண்கள் கட்டுப்பாட்டாலும், மட்டுப்படுத்தலாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற போதிலும், இதில் அபிப்பிராயம் மாறுபட்டுள்ளது. இந்துக்களாலும், கிரேக்கர்களாலும் கல்வியின் மளித்தலும் அதிகமான பெற்றோரும், பாடசாலைகளும் தொடர்ந்து பின்பற்றுகின்றனர். உயர்ந்தபதவிக்கான பொறுப்புள்ள, நல்ல எதிர்காலமுள்ள பாடங்களை தெரிவு செய்வதில் ஆண்கள்

ஆண்கள் ஊக்கப்படுத்தப்படும் அதே வேளையில் அதிக விவேகம் தேவைப்படாததும் தொழில் ரீதியில் நல்ல எதிர்காலமற்றதுமான பாடங்களை தெரிவு செய்யவே பெண் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

...தற்போது நிலைமை சரி இல்லை என்று சிலர் எதிர்க்கலாம். நிலைமை திருந்தும் வரை பெண்கள் தம் வழமையான தொழில்களையேசெய்ய வேண்டும் என்றும் கூறலாம். நிலைமைகள் சீரடையாததால் தான் புதுச்சந்தர்ப்பங்களும், வாய்ப்புக்களும் ஏற்பட்டன வென்றும், இச்சந்தர்ப்பத்தை நாம் தவறவிடாது பற்றிக்கொள்ள வேண்டுமென்றும் பெண்கள் சார்பில் வாதிடப்படலாம். இந்தக் கருத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள் பல நாடுகளில்நிகழ்ந்திருக்கின்றன. உதாரணத்துக்குப் பிரான்ஸ், பனன், அல்ஜீரியப் புரட்சியைப் பற்றி எழுதும் போது ''புரட்சிக்கு முந்திக்சணவரோ அன்றி தாயாரின் உதவியோ இன்றித் தனிமையில் வீட்டை விட்டு வெளியேறாத பெண்கள், இன்று விசேட வேலைகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். முன் பின்அறியாத குடும்பங்களுடன் இரவில் தங்குகிறாள். கணவரும், தகப்பனாரும் ஆண், பெண் என்ற வித்தியாசத்தைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்குகின்றார்கள்''

இப்படியான மாற்றங்கள் எமது சமுதாயத்திலும் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது. என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம். தேவையற்ற பிரச்சினையில் பெண்கள் தங்களை ஈடுபடுத்த வேண்டும் என்று நான் யோசனை கூறவில்லை. ஆண்களோ அன்றிப் பெண்களோ வன்செயல்களில் ஈடுபடுவதை நான் ஊக்குவிக்க மாட்டேன். நான் சொல்ல நினைப்பது என்னவென்றால், புரட்சிக் காலங்களில், உதாரணத்துக்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியின்போதும், 50 வருடங்களுக்கு முன் நிகழ்ந்த எகிப்திய அல்லது இந்திய சுதந்திர போராட்டத்தின் போதும், ஏன் இன்றைய பாலஸ்தீனிய ''இன்ரிபடா'' வின் போதும், பெண்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகள் நீக்கப்படலாமென்றும், பல துறைகளிலும் முன்னேறுவதற்கு அவர் இந்த சந்தர்ப்பத்தையும், சுதந்திரத்தையும் பயன்படுத்த வேண்டும் அதில் முன்னேற வேண்டும் என்பதே.

இப்படியான அமைதியற்ற நிலையில கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்கள் தொடர்ந்தும் கொண்டிருக்கா. இதேபோனறு துரித பொருளாதார, கலாசார மாறறங்கள் நிகழும் போது தென்னிந்தியாவில் சங்ககாலத்திலும், ஐக்கியஅமெரிக்காவில் பல தசாப்தங்களாகவும் 2ஆம் உலகப்போர் முடிவுற்ற கால கட்டங்களிலும்பெண்கள்தமக்குச்சாதாரணகாலங்களில்மறுக்கப்பட்டபிரதான பொறுப்புக்களைஏற்றுசுதந்திரமாக இயங்கலாம் அரசர்களினால் அர

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

# வட்டு. தொ. நுட்பக்கல்லூரியில் அடாவடித்தனம்

ஆசிரியர்,
ஈழநாதம்,

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி, வட்டுக் கோட்டையில் கல்வி கற்கும் மாணவர்களாகிய எங்களுக்கு மாணவர் மன்றமொன்று அமைத்து அதன் மூலம் நிர்வாகத்துடன் கல்வி சம்பந்தமான எங்களது குறைகளை தீர்க்கும் நிலை கடந்த காலங்களில் கிரமமாக நடந்துவந்த தொன்றாகும்.

இந்த மன்றத்திற்கான மாணவ தலைவரை வாக்கு முறைமூலம் (தேர்தல் மூலம்) மாணவர்கள் தெரிந்தெடுக்கும் உரிமையும் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வருடம் நடைபெற்ற மாணவ தலைவர் தெரிவு ஒரு முக்கியமானதொரு நிகழ்ச்சியாக அமைந்தது. காரணம் மூன்று வருடம் பயிலும் மாணவர்கள் தான் பதவியில் வெற்றிபெறுவது வழக்கம் ஆயினும் இம்முறை ஒரு வருட பாடநெறியில் பயிலும் மாணவன் தெரிவு செய்யப்பட்டதினால் சில பழைய மாணவர்கள் தொடர்ந்து நடைபெற்ற மன்றத்தின் பொதுக்கூட்டங்களுக்கு சமுகம் தராமலும், மன்றத்தின் செயல்பாடுகளுக்கு ஒரு முட்டுக்கட்டையாகவும் இருந்து வந்தனர்.

ஆயினும் மாணவ தலைவர் தனது புத்திசாதுரியத்தினால் அவற்றை சமாளித்த வண்ணம் மன்றத்தை தொடர்ந்து இயக்கிவந்தார். இதேவேளையில் கல்லூரிக்கான கலை விழா கடந்த மாதம் (மே 25) நடத்துவதற்காக சகல மாணவர்களையும் அழைத்து ஒத்துழைப்புக்களை பெறவேண்டிய ஒரு சூழ்நிலை மாணவ தலைவருக்கு ஏற்பட்டது. இதை நடைமுறைப்படுத்த சென்ற மாணவ தலைவருக்கு அதே பழைய மாணவ குழுவினரால் ஒத்துழைப்பு வழங்க மறுக்கப்பட்டது.

இதனை நிர்வாகத்தின் சவனத்திற்கு கொண்டுவந்த போது கல்லூரியின் கலைவிழா இவ் வருடம் கட்டாயமாக நடாத்தப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியென்றும், ஒத்துழைப்பு வழங்கும் மாணவர்களுடன் தொடர்ந்து நிகழ்ச்சிக்கான ஒழுங்குகளைசெய்யும்படி அனுமதியும் தரப்பட்டது.

கடந்த 25-05-90 அன்று கல்லூரியின் கலைவிழாவுக்கு இரு தினங்களுக்கு முன்பு அதே பழைய மாணவ குழுவினரினால் கலைவிழாவுக்கு நாடக பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவன் ஒருவர் இதற்குப் போவதற்கு தடைசெய்யப்பட்டதினால் மாணவ தலைவர் இதில் தலையிட்டு அவரை விடும்படி கேட்கப்பட்ட போது வாக்குவாதம் ஏற்பட்டது ஆயினும் இதில் பிரயோசனமில்லை என்று உணர்ந்த தலைவர் தடைசெய்யப்பட்ட மாணவனை விட்டுவிட்டு தொடர்ந்து கலைவிழாவுக்கான பயிற்சிகளில் ஈடுபடவென வந்துவிட்டார்.

## மக்கள் மடல்

இவ்விதம் வந்து நாடகப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த தலைவரை பழைய மாணவர் குழு மீண்டும் வந்து சில நிமிடம் கதைக்கவேண்டுமென அழைத்து மிருகத்தனமாக தாக்கினார்கள் இதில் தலையிடச் சென்ற சக மாணவன் ஒருவருக்கு கல்லூரி வளவில் வைத்து தலையில் பலத்த காயமும் ஏற்படுத்தப்பட்டது. இவைகள் நடந்து முடிந்த பின்பு அங்கு வந்த நிர்வாகத்தினரிடம் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் என கேட்ட போது அவர்கள் கூறிய பதில் மன்றத்தை கலைப்போம் என்பது தான் இதனை மற்ற மாணவர்கள் ஆட்சேபித்ததினால் அந்த சந்தர்ப்பத்தில் வேறு பிரசசினைகள் ஏற்படுமென்று நிர்வாகத்தினர் மற்ற மாணவர்களுக்கெதிராக (பழைய மாணவர்) தாங்கள் நடவடிக்கை உடனடியாக எடுப்பதாகவும் தொடர்ந்து கலைவிழாவுக்கான ஒழுங்குகளை செய்யும்படியும் கோரி நின்றனர்.

இவைகள் நடந்து ஒரு கிழமையின் பின் பழைய மாணவர்களுக்கு தற்காலிகமாக இரு கிழமைகள் இடை நிறுத்தமும் அதே சந்தர்ப்பத்தில் மாணவதலைவருக்கு பொதுக் கூட்டத்தில் மன்னிப்பு கோரும் படியும் நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டது. தலைவருக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின்படி அவர் நடப்பதாக மூன்று தினங்களுக்குள் நிர்வாகத்தினரிடம் கூறாவிடின் அவரின் மாணவ தலைவர் பதவி பறிக்கப்படும் என்ற அறிவுறுத்தலும் நிர்வாகத்தினரால் கூறப்பட்டது என்பது எங்களுக்கும், தலைவருக்கும் மனதில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. இதனை ஆட்சேபித்து நாங்களும், தலைவரும் தனித்தனியான கடிதங்களை கொண்டு சென்று ''எதற்காக தலைவர் மன்னிப்பு கேட்கவேண்டும்'' என நிர்வாகத்திடம் கேட்டபோது அவர்கள் தலைவரின் வாக்குவாதம் தான் இந்த குழப்பத்திற்கு காரணமென்றும் ஆயினும் இதை பெரிதாக எடுக்க வேண்டாமென்றும் மாணவ தலைவர் என்ற ரீதியில் சபையில் மன்னிப்பு கேட்பதில் தவறில்லை எனவும் கூறினார்கள். இதனை நாங்கள் பின்பு கலந்தாலோசித்து தலைவரை மன்னிப்புக் கேட்க ஒப்புக்கொள்ளச் செய்தோம். ஏனெனில் நிர்வாகத்தினர் முதலில் கூறிய மன்றக் கலைப்புக்கான திட்டத்திற்கு இதுவழிகோலக் கூடாது என்பதே எமது இந்த முடிவுக்கான காரணம்.

13-06-90 அன்று தற்காலிகமாக நிறுத்தப்பட்ட மாணவர்கள் கல்லூரிக்கு சமுகம் தந்த பின்பு மன்றத்தின் ஆலோசகர்களின் (ஆசிரியர்கள்) தலைமையில் கூட்டப்பட்ட மாணவ பொதுக்கூட்டத்தில் தலைவரை மன்னிப்புக் கேட்கும்படி கேட்கப்பட்டது. அதன்படி மாணவ தலைவர் முதலில் நடந்த சம்பவங்களை விளக்க முற்பட்ட போது மன்றத்தின் ஆலோசகர்களினால் தடைசெய்யப்பட்டது. அதற்கு தலைவர் ''தனது கருத்துக்களை தெரிவித்துவிட்டு மன்னிப்பு கேட்பதாக கூறிய போது இது மன்னிப்புக்காக கூட்டப்பட்ட கூட்டமென்றும் இதில் வேறு விஷயங்களை விளக்க முடியாதென்றும்கூறி, மாணவ தலைவரின் பேச்சுரிமை மறுக்கப்பட்டது. இதன் பின்பு மாணவ தலைவர் மன்னிப்பு கேட்டார். இவரின் மன்னிப்பு உரை முடிந்ததும் மீண்டும் மன்றத்தின் ஆலோசகர்கள் எழுந்து தலைவர் என்ற ரீதியில் மன்னிப்பு கோருவதை விடுத்து தனிப்பட்ட ரீதியில் மீண்டும் மன்னிப்பு கேட்கும் படியும் இல்லையேல் தலைவர் பதவி பறிக்கப்படும் எனவும் கூறினார்கள்

தலைவர் தான் தனிப்பட்ட ரீதியில் எந்த பிழையும் விடவில்லை எனவும் தனிப்பட்ட ரீதியில் எந்த பகைமை உணர்வுடனும் தான் செயல் படவில்லையெனவும் மாணவ தலைவரென்ற ரீதியில் மட்டும் மன்னிப்புக் கேட்கும்படி நிர்வாகத்தினரினால் கட்டாயப்படுத்தப்பட்டதினால் இந்த மன்றத்தில் மன்னிப்பு கேட்டுவிட்டேன் எனவும் கூறிவிட்டு, தனிப்பட்ட ரீதியில் மன்னிப்புக்கேட்க மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து நிர்வாகத்தினரால் தலைவருக்கான பதவி இவருக்கு இழக்கப்பட்டதென்றும் மன்றத்தின் செயல்பாடு எனைத்தும் நிறுத்தப்பட்டதெனவும் அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து குரல் எழுப்பிய மாணவி ஒருவரின் பேச்சும் மறுக்கப்பட்டதுடன், சபையின கருத்துக்கள் இங்கு கவனத்தில் சொள்ளப்பட மாட்டாது எனவும் நிர்வாகத்தினரால் கூறப்பட்டது.

(குறிப்பு)

★ இதனை எதிர்த்து வழமையாக மற்ற இடங்களில் நடக்கும் பகிஷ்கரிப்பினை நாம் நடாத்த முயலவில்லை காரணம் எமது பரீட்சைகளை இது பாதிக்கும். (தனியார் கல்லூரி என்பதினால்)

★ இந்த ஏற்பாட்டங்கள் நிர்வாகத்தினரால் மறைக்கப்படும்.

★ எனவே இதனை வெளியுலகத்திற்கு கொண்டுவந்து கல்லூரியின் அயலில் வசிக்கும் சிலஅடாவடித்தனமானமாணவர்களின் போக்கிற்கு பயந்து எம்மையும் எமது மாணவ மன்றத்தையும் ஒடுக்க முயலும் நிர்வாகத்தினருக்கு உணர்த்தி திருத்தியமைக்க வேண்டிநிற்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம்
தொழில்நுட்பக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

---

# சம்பளம் கிடைக்காமையால் கடவை ஊழியர்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியைச்சேர்ந்தரயில் கடவை ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை. என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளம் கடந்த எட்டாந்திகதிவழங்கப்பட்டது. சகல ஊழியர்களுக்கும் ஒரே நேரத்திலேயே சம்பளம் வழங்கப்படுவது வழக்கமாயினும் தற்காலிக ஊழியர்களுக்கான சம்பளம்இம்முறை குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது வடபகுதிக்கான ரயில்சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் தங்களுக்கான இந்த சம்பளம் வழ்ங்கப்படுமா என்று இந்த ஊழியர்கள் அதிருப்தி அடைந்துள்ள போதும் வழமைபோல் தமது கடவை கொட்டில்களுக்குச் சென்று வரவு புத்தகங்களில் கையொப்பமிட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# ஊர்காவற்றுறையில் ஷெல்லினால் பலத்த சேதம், தீவுப்பகுதி துண்டிப்பு

(வேலணை)

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து நேற்றுமுன் தினம் சனிக்கிழமை ஊர்காவற் துறைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களால் பல கடைகள் வீடு வாசல்கள் என்பன பலத்த சேதத்துக்குள் ளானது.

மக்கள் பலருக்கும் பலத்த காயங்கள்ஏற்பட்டுஊர்காவற் துறை அரசினர் வைத்தியசாலையிலும் மூளாய் தனியார் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

இத் தாக்குதலினால் ஏற்கனவே பழுதாக இருந்து திருத்தப்பட்டிருந்த ஊர்காவற்துறை இறங்குதுறைமுக மேடையும் சேதத்துக்குள்ளானது.

காரைநகர் கடல் பகுதியில் இருந்து தீவுப்பகுதிக்கு செல்லும் பிரதான மின்சார விநியோக கம்பிகள் ஷெல் தாக்குதலினால் சேதமாக்கப்பட்டு அறுந்ததால் தீவுப்பகுதிக்கான மின்சாரம் கடந்த மூன்று தினங்களுக்கு மேலாக தடைப் பட்டுள்ளது.

நாரந்தனை கொக்கலா மண்டை என்ற இடத்தைச் சேர்ந்த திரு. எஸ். குமாரசாமி என்பவர் ஷெல் தாக்குதல் அதிர்ச்சியால் மரணமுற்றார்.

ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஏராளமான நோயாளர்கள் அச்சம் காரணமாக அவசர அவசரமாக வெளியேறிச் சென்றுள்ளனர்.

சிலர் வேலணை அரசினர் வைத்தியசாலையிலும் தற்பொழுது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ் கோட்டைப் பகுதியில் இருந்து மேற் கொள்ளப் பட்ட ஷெல் தாக்குதல் காரணமாகவும் தீவுப் பகுதிக்கான போக்கு வரத்து சேவைகளும் பண்ணை வீதியூடாக முற்றாக தடைப்பட்டிருந்தன.

இதனைக் காரணமாக வைத்து சில வியாபாரிகள் பொருட்களின் விலையையும் கூட்டி யானை விலையில் விற்று வந்தனர்.

மக்கள் மீண்டும் 1987 ஆம் ஆண்டைப்போல தீவுப்பகுதிக்கான பிரயாணத்தை அராலிக் கடல் மார்க்கமாக மேற்கொண்டனர். சிறிய மீன் படகுகளில் பிரயாணத்தைச் செய்யும் ஒவ்வொருவருக்கும் ஒரு வழி பிரயாணக் கட்டணமாக பத்து ரூபா அறவிடப்பட்டு வந்தது.

யாழ் நகரில் மேற் கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களுக்குப்பயந்த யாழ். பெரியாஸ்பத்திரி பிரசவ வார்ட்டில் தங்கி சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணித்தாய் ஒருவர் பீதி காரணமாக அங்கிருந்து வெளியேறி பல சிரமத்தின் மத்தியில் அராலிக் கடல் வழியாக வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு வந்தார். அன்றைய தினமே அனுமதிக்கப்பட்டு பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ள சம்பவமொன்றும் இடம் பெற்றிருக்கின்றது.

ஷெல் தாக்குதல் காரணமாக ஊர்காவற்றுறை நகர மக்களும் அதனை அண்டிய கரையோரப் பகுதி மக்களும் அகதிகளாக நாரந்தனை, வேலணை சாட்டிப்பகுதியில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு கிறிஸ்தவ குருமார்களும் பல பொது நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றன.

மின்சார விநியோகம் உட்பட பல தொழிற்சாலைகள் என்பன இயங்காமல் இருக்கின்றன. (14)




## நிதர்சனம் ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் நிதர்சனம் பரீட்சார்த்த ஒளிபரப்பு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தினசரி இரவு 7 மணிக்கு இந்நிகழ்ச்சி ஆரம்பமாகிறது.

## கிளிநொச்சியில் மக்கள் ஆலயங்களில் தஞ்சம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலினால், திருநகர், கணேசபுரம், உதயநகர், அம்பாள் குளம், பரவிப்பாஞ்சான் கனகபுரம் பகுதி மக்கள் குடிபெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் வட-கிழக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு கழக கிளிநொச்சிப் பிரிவு உருத்திரபுரம் காந்தி சேவா சங்க கட்டிடத்தில் பல நூற்றுக்கணக்கான அகதிகளை வைத்து பராமரித்து வருகிறது.

இது தவிர, மற்றுமொரு தொண்டர் ஸ்தாபனமான சர்வோதய இயக்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்து வருகிறது.

சுமார் 10 ஆயிரம் மக்கள் தத்தம் வீடுவாசல்களை விட்டு உருத்திரபுரம், முரசுமோட்டை, கண்டாவளை, அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி நகரைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள பல வீடுகள் ஷெல் தாக்குதல்களாலும்; பொம்பர் விமானக் குண்டு வீச்சினாலும், ஹெலிகொப்டர் தாக்குதலாலும் சேதமடைந்துள்ளன.

## மீனவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை

(வல்வெட்டித்துறை)

நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வல்வை பாக்குநீரிணைக் கடலில்வைத்துக் கைது செய்யப்பட்ட மீனவர்களும் றோலரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

மேற்படி சம்பவத்தால் உறவினர்கள் கவலையும் மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

மேலும் ஸ்ரீலங்கா கடற்படையினர்ரோந்தும்அதிகமாகக் காணப்படுவதுடன் நேற்றுக்காலை 8 மணியளவில் கடலில்மீனவர்களுக்குச்சொந்தமான மீன்பிடிபடகுகளுடன் நடமாடியதையும் பார்க்க முடிந்தது. (68)

## ப. நோ. கூ. சங்க கொள்வனவு உத்தியோகத்தர் வேண்டுகோள்

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு உத்தியோகத்தர் வாகன வசதியுடன் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்துக்கு (18-6-90) இன்று காலை 8 மணிக்கு வருகை கொடுக்கும் வண்ணம் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## குருநகரில் மீன் களவு

(விசேட நிருபர்)

நேற்று முன்தினம் (16-6-90)யாழ் நகரப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலைமையால் வீடுகளைவிட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தவர்கள் யுத்தநிறுத்த அறிவித்தலைத் தொடர்ந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

யாழ்நகரம், குருநகர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய பகுதி மக்கள் வீடுகளை விட்டு கோவில்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

வீடுகளை விட்டு மக்கள் வெளியேறியதைப் பயன்படுத்தித் திருடர்கள் பொருட்களைச் சுருட்டுவதிலும் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

குருநகர் மீன் சந்தைப்படுத்தும் பகுதியில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்கள் களவாடப்பட்டதாகவும் தெரியவருகிறது. (21

## கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவி

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் இலங்கை வங்கி மூன்னூறு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன்உதவிகள் செய்யவுள்ளது.

இந்த சங்கங்களுக்கு பத்து லட்சம் ரூபா வீதம் இந்தக் கடன் வழங்கப்படும்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவே இந்த உதவி வழங்கப்படுகிறது.

இதற்காக சங்கத்தில் உள்ளவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படும்.

இச்சங்கங்களில் நூறு பேர் அங்கத்தவர்களாக இருப்பதுடன், இந்தக் கட்டணத்தைத் திருப்பிச்செலுத்த ஐம்பதாயிரம் ரூபாவை வைப்பிலிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்பத்தைந்துவங்கிக்கிளைகள் மூலம் இக்கடன் வழங்கப்படவுள்ளது.

### பாடங்கள்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் சம்பந்தமான ஆலோசனைகள்கேட்கப்பட்ட ஒளவையாரும் அதிகமான எழுத்தா

## திருமலையில் காயமடைந்து குடாநாடு வந்து சேர்ந்தோர்.

(வல்வெட்டித்துறை)

21) பருத்தித்துறை, குமார்

### ஷெல்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

விமானத் தாக்குதல்களுக்கும் பயந்து மக்கள் தத்தமது வீடுகளை விட்டு ஓடிய போது, திருடர்கள் சந்தர்ப்பத்தைப்

### கிளிநொச்சிக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரியின் நிர்வாகப்பகுதி கட்டிடம், காணி அலுவலக கட்டிடம், இறைவரித் திணை

## மக்கள் நடமாட்டம் அதிகம் பஸ் கட்டணம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்தம் தமிழ் பிர

பொதுமக்கள் தாம் வழமையாக கொடுக்கும் பஸ் கட்ட

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலினால், திருநகர், கணேசபுரம், உதயநகர், அம்பாள் குளம், பரவிப்பாஞ்சான் கனகபுரம் பகுதி மக்கள் குடி பெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் வட-கிழக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு கழக கிளிநொச்சிப் பிரிவு உருத்திரபுரம் காந்தி சேவா சங்க கட்டிடத்தில் பல நூற்றுக்கணக்கான அகதிகளை வைத்து பராமரித்து வருகிறது.

இதுதவிர, மற்றுமொரு தொண்டர் ஸ்தாபனமான சர்வோதய இயக்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்து வருகிறது.

சுமார் 10 ஆயிரம் மக்கள் தத்தம் வீடுவாசல்களை விட்டு உருத்திரபுரம், முரசுமோட்டை, கண்டாவளை, அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி நகரைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள பல வீடுகள் ஷெல் தாக்குதல்களாலும்; பொம்பர் விமானக் குண்டு வீச்சினாலும், ஹெலிகொப்டர் தாக்குதலாலும் சேதமடைந்துள்ளன.

யாழ் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களுக்குப்பயந்த யாழ். பெரி உட்பட பல தொழிற்சாலைகள் என்பன இயங்காமல் இருக்கின்றன. (14)

## மீனவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை

(வல்வெட்டித்துறை)

நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வல்வை பாக்குநீரிணைக் கடலில்வைத்துக் கைது செய்யப்பட்ட மீனவர்களும் றோலரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

மேற்படி சம்பவத்தால் உறவினர்கள் கவலையும் மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

மேலும் ஸ்ரீலங்கா கடற்படையினர்றோந்தும்அதிகமாகக் காணப்படுவதுடன் நேற்றுக்காலை 8 மணியளவில் கடலில்மீனவர்களுக்குச்சொந்தமான மீன்பிடிபடகுகளுடன் நடமாடியதையும் பார்க்க முடிந்தது. (68)

## கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன்உதவி

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் இலங்கை வங்கி மூன்னூறு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன்உதவிகள் செய்யவுள்ளது.

இந்த சங்கங்களுக்கு பத்து லட்சம் ரூபா வீதம் இந்தக் கடன் வழங்கப்படும்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவே இந்த உதவி வழங்கப்படுகிறது.

இதற்காக சங்கத்தில் உள்ளவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படும்.

இச்சங்கங்களில் நூறு பேர் அங்கத்தவர்களாக இருப்பதுடன், இந்தக் கட்டணத்தைத் திருப்பிச்செலுத்த ஐம்பதாயிரம் ரூபாவை வைப்பிலிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்பத்தைந்துவங்கிக்கிளைகள் மூலம் இக்கடன் வழங்கப் படவுள்ளது.

யாழ்நகரம், குருநகர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய பகுதி மக்கள் வீடுகளை விட்டு கோவில்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

வீடுகளை விட்டு மக்கள் வெளியேறியதைப் பயன்படுத்தித் திருடர்கள் பொருட்களைச் சுருட்டுவதிலும் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

குருநகர் மீன் சந்தைப்படுத்தும் பகுதியில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்கள் களவாடப்பட்டதாகவும் தெரியவருகிறது. (21

### பாடங்கள்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் சம்பந்தமான ஆலோசனைகள்கேட்கப்பட்ட ஔவையாரும் அதிகமான எழுத்தாளர்களும், புலவர்களும் சங்க காலத்தில் நிறைய இருந்தார்கள். இப்படியான நெருக்கடி நிறைந்த காலங்களில் பெண்களால் பெறப்பட்ட சில தன்மை நீடித்தும் சில நெருக்கடி காலம் முடிவடையவியலாமலும்போகலாம். பிரெஞ்சிய புரட்சியின்போது அந்நாட்டுப் பெண்கள் அடைந்த அந்தஸ்தையோ, சங்ககாலத்தின்போது பெற்றிருந்த சுதந்திரத்தையோ தமிழ்ப்பெண்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை என்றே கூற வேண்டும்.

வழக்கத்திற்கு மாறான நிலைமைகள் உள்ள இந்நேரத்தில் பெண்களுக்கு புதிய சந்தர்ப்பங்கள் முன்கூட்டியே கிடைக்கலாம் வரையறுக்குட்பட்ட அளவில் 80 ஆம் ஆண்டுகளில் பலவகைப்பட்ட பெண்களின் அமைப்புக்கள் நாட்டின் பல பாகங்களிலும் பொறுப்பான பதவிகளில் முக்கியமான முடிவு எடுப்பதைகண்டோம். மேலும் பெரும்பாலான ஆண்கள் கொல்லப்பட்டும், இயங்கமுடியாதவர்களாக்கப்பட்டும், போராட்டத்தில் தொடர்பு கொண்டும், வெளிநாடுகளுக்குச் சென்றும் இருக்கும் இக்கால கட்டத்தில் முக்கிய பதவிகளுக்கு, முன் கிடைக்காத பதவிகளுக்கு என்றும் இல்லாதவாறு இன்றுபெண்கள்தேவைப்படுகின்றனர்.ஓரளவுமுன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மேற்கொண்டும் முன்னேறிக் கிடைத்த,நன்மைகளைப்பாதுகாக்க வேண்டும்.

எதிர்காலம் எப்படிஇருக்கும் என்பதைத்தீர்மானிப்பதிலும், அதற்கான அமைப்புக்களை ஆக்குவதிலும், அதன் தேவைகளைப் பெறுமதியை நிலை நிறுத்துவதிலும், அதனை வழி நடத்தலிலும் பொதுத் துறையில் பெண்கள் அதிக பங்காற்றுவார்கள் என நாங்கள் நம்புவோமாக.

## திருமலையில் காயமடைந்து குடாநாடு வந்து சேர்ந்தோர்.

(வல்வெட்டித்துறை)

திருமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவம் சிங்களக் காடையர்களால் தாக்குதலுக்குள்ளாகி பல தமிழ் மக்கள் இறப்பிற்குள்ளாகியும் சிலர் படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளார்கள். இவர்களில் சிலர் படகுகள் மூலம் வடமராட்சிப் பகுதியில் நேற்று 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வந்து சேர்ந்துள்ளார்கள்.

மேற்படி பெரும் தாக்குதல்களுக்குள்ளானவர்கள் உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் பெயர்ப்பட்டியல் பின்வருமாறு: - சந்துரு பருத்தித்துறை, பார்த்தீபன் (வயது 15) பருத்தித்துறை, பிரதீபராஜ் (வயது 21) பருத்தித்துறை, குமார் (வயது 19) பருத்தித்துறை, இதயறஞ்சன் (வயது 50) பருத்தித்துறை, சசிக்குமார் (வயது 12) பருத்தித்துறை, உமாராம் (வயது 21) பருத்தித்துறை, ஜெயாகரன் (வயது 20) பருத்தித்துறை, மிக்கல் (வயது 19) பருத்தித்துறை, நீதன் (வயது 21) பருத்தித்துறை, சையிலன் (வயது 17) பருத்தித்துறை, நவரட்னம் (வயது 17) பருத்தித்துறை, காணதாசன் (வயது 41) மூதூர், கார்மேகன் (வயது 17) வியாபாரிமூலை, நீல்டன் (வயது 16) திருமலை, ஜெயாதரன் திருமலை, தனத் முள்ளியவளை றோஸ்மன் மாங்குளம், வேந்தன் கிளிநொச்சி, நதி பரந்தன்,

இவர்களில் சிலர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். மத்திய வைத்திய சாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். (68)

### ஷெல்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

விமானத் தாக்குதல்களுக்கும் பயந்து மக்கள் தத்தமது வீடுகளை விட்டு ஓடிய போது, திருடர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீடுகளுக்குள் புகுந்து பொருட்களையும், நகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (49)

### அரசின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடான முறையில் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வரும் அதேவேளை சிறிலங்கா ஆயுதப்படையினர் யுத்த நிறுத்தத்தை மீறுவதோடும் அல்லாமல் தமிழ் மக்களைப் படுகொலை புரிவதோடு வீடுகள், சொத்துக்கள் என்பனவற்றையும் நாசமாக்குகின்றனர் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

### யாழ் - கொழும்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐநூறு ரூபாவரை அறவிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடயம்பற்றி பஸ் உரிமையாளர்களிடம் வினவிய போது டீசல் விலையேற்றமே இதற்குக் காரணம் என கூறினர். (அ)

### பெரியபோர

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளன. இத்தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு இராணுவ அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேலும் விமானங்கள், ஹெலிகப்டர்கள் அனுப்பக் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன,

அம்பாறையில் இருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி வந்த இராணுவத்தினர் புலிகளினால் வழிமறிக்கப்பட்டதினால் திரும்பிச் செல்லாமல் தற்பொழுது பாண்டிருப்புப் பாலத்தில் சென்றிகளை அமைத்து அவ்விடத்திலேயே நிலை கொண்டுள்ளன.ர்

### கிளிநொச்சிக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரியின் நிர்வாகப்பகுதி கட்டிடம், காணி அலுவலக கட்டிடம், இறைவரித் திணைக்களக்கட்டிடம், கணக்காளர் பகுதி, கோவைகள் சேகரித்து வைக்கும் பகுதி, திட்டமிடல் பகுதிஆகியனஇயங்கமுடியாத அளவிற்கு சேதம் அடைந்துள்ளன. இதுதவிர பதிவாளர் அலுவலகம், நில அளவையாளர் அலுவலகம் ஆகியனவும் சேதம் அடைந்துள்ளன.

கிளிநொச்சி கச்சேரியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் புதிதாக அங்கு கொண்டு வரப்பட்ட போட்டோஸ்ரற் இயந்திரமும் சேதமடைந்துள்ளது.

ஏ.பி.சி. கட்டிடம், டி.ஆர்.சி.சி. கட்டிடம்ஆகியன சேதம் அடைந்த போதும் உழவு இயந்திரங்கள் ஏதும் சேதமடையாதுள்ளன, உரக்களஞ்சியத்திற்கு எதுவிதசேதமும்ஏற்படவில்லை. கிளிநொச்சி சந்தை முற்றுமுழுதாக எரிந்துள்ளதனால் எங்கும்சாம்பல் மேடாக காட்சி அளிக்கிறது. ரயில் நிலையக் கட்டிடமும் பாரிய சேதத்திற்குள்ளாகியது. (49)

### ஆங்கில

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் பத்திரிகைகள் ஊடாக அறிவிக்கப்படுமென்றும் யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட அறிவித்தல் பெறவிரும்புபவர்கள் முத்திரை ஒட்டப்பட்டு சுயமுக வரியிடப்பட்ட கடித உறையை மேற்படி நிலையத்தில் இதற்கெனவைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### போர்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நிலமைகளை அவதானித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் நடமாட்டம் அதிகம் பஸ் கட்டணம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்தம் தமிழ் பிரதேசம் எங்கும் அமுலுக்கு வந்ததைத்தொடர்ந்துநேற்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதிலும் யாழ். நகரில் மக்கள் நடமாட்டம் வளமையிலும் அதிகமாககாணப்பட்டது.

ஆனால் வாகனங்களின் நடமாட்டம் குறைவாகவே இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. திடீரென ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பே இந்த வாகன நடமாட்டக்குறைவுக்கு காரணமாகும்.

தூர இடத்திலிருந்து தனியார் மினிவான்களில் வந்த பொதுமக்கள் தாம் வழமையாக கொடுக்கும் பஸ் கட்டணத்திலும் ஒரு மடங்கு கட்டணம் அதிகமாகச் செலுத்தியதாகவும் மனம் வருந்திக் கொண்டனர். (அ)

## புதை பொருள் ஆராய்ச்சி திணைக்கள நூற்றாண்டு விழா

(கொழும்பு)

புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களம் அதன் நூற்றாண்டு நிறைவு தினத்தை கொண்டாடுமுகமாக பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கிறது.

அடுத்த மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு கல்வி, விஞ்ஞானம் சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

புதைபொருள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் இடங்களை பார்வையிடுவதற்கு அக்கறை கொண்டுள்ளோருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

### ஹெலி ரோந்து

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரில் உயரப்பறந்து ரோந்து சுற்றுவதற்கு முதல் சில நிமிடங்களுக்கு முதல் விமானமொன்று யாழ் நகருக்குக் குறுக்கே வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப்பறந்து செல்வதை அவதானிக்க முடிந்தது.

## தபால் சேவை ஸ்தம்பிதம்

(அராலி)

விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தினால் தபால் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன.

அதனால்இலங்கைதொழில் நுட்பக்கல் லூரிப் பரீட்சைகள் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெறவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அராலி ஊடாக பாதை

(அராலி)

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யாழ். கோட்டைப்பகுதியில் இடம் பெற்றுள்ள மோதல் காரணமாக பண்ணை ஊடான தீவுப்பகுதிப் போக்கு வரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்ததைத் தொடர்ந்து அராலித்துறை ஊடானகடல்மார்க்க போக்குவரத்துக்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

### சூட்டுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவர் அக்கரையான் அம்பலப்பெருமாளைச் சேர்ந்த பெரிய குப்பன் கந்தசாமி (வயது 33) என்றும் அடையாளம் காணப்பட்டார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அவரது சடலம் நேற்றுமுன்தினம் மாலை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயபங்குத்தந்தையின் உதவியுடன் புதைக்கப் பட்டதாக அறியப்படுகிறது. (21)

### போதைப் பொருள் கடத்தல்

## சிங்கப்பூரில் நான்கு இந்தியர் கைது!

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் வைத்துநான்கு இந்தியர்களும் ஒரு சிங்கப்பூர் பிரஜையும் போதைவஸ்த்து கடத்தல் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து முப்பது கிலோ அபின், 1.2 சத கிலோ கிரோயின் போதை வஸ்தையும் போதைவஸ்து தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் இந்தியாவில் இருந்து இவற்றைக் கடத்தி வந்தபோது பிடிபட்டனர். இந்தியாவில் இருந்து போதை வஸ்து கடத்தும் கோஷ்டியில் உள்ளவர்கள் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் மீது இன்று திங்கட்கிழமை வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு மரண தண்டனைவிதிக்கப்படும்.

சிங்கப்பூர் சட்டத்தின்படி பதினைந்து கிராமுக்கு அதிகமாக கிரோயின் வைத்திருந்தால், ஆயிரத்து இருநூறு கிராமுக்கு அதிகமான அபின் வைத்திருந்தால் கட்டாய மரணதண்டனை விதிக்கப் படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதிய உதவி அரச அதிபர்

(வேலணை)

வேலணைப் பகுதிக்கான புதிய உதவி அரசாங்க அதிபராக திரு.எஸ்.சிவகுருநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (14)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.